## பி.டி. கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு: மத்திய அமைச்சர் முற்றுகை

First Published : 01 Feb 2010 12:00:00 AM IST




மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காயை வர்த்தக ரீதியில் பயன்படுத்த அனுமதிப்பது குறித்து ஹைதராபாதில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்துக் கேட்பு கூட்டத்தில் மேட

ஹைதராபாத், ஜன. 31: மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காய்க்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷை முற்றுகையிட்டு முழக்கம் எழுப்பப்பட்டது. இந்த சம்பவம் ஆந்திரத் தலைநகர் ஹைதராபாதில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காயை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதை அனுமதிப்பது குறித்து பொது மக்களின் கருத்து கேட்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய சுற்றுச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் இந்த கருத்து கேட்பு கூட்டங்களை நடத்தி வருகிறார்.

ஹைதராபாதில் ஞாயிற்றுக்கிழமை இதுபோன்று கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காய்க்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. எதிர்ப்பாளர்கள் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷை முற்றுகையிட்டு முழக்கம் எழுப்பினர். எதிர்ப்பாளர்களில் பெரும்பாலானோர் இடதுசாரி விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள். சுதேசி ஜாக்ரன் மஞ்ச் அமைப்பைச் சேர்ந்தவர்களும் இந்த முற்றுகையில் ஈடுபட்டனர். மரபணு மாற்ற கத்தரி காயை ஆதரிப்பவர்களும் எதிர் கோஷம் எழுப்பினர். இதனால் பெரும் குழப்பம் நிலவியது.

தன்னை முற்றுகையிட்டு முழக்கம் எழுப்புபவர்களை சமாதானப்படுத்த அமைச்சர் ரமேஷ் முயன்றார். "கூட்டம் இத்தோடு முடிந்துவிடப் போவதில்லை. கருத்துக்களைச் சொல்ல அனைவருக்கும் வாய்ப்புத் தரப்படும். எனவே அனைவரும் இருக்கைக்குச் செல்ல வேண்டும்' என்று அவர் திரும்பத் திரும்ப வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் எதிர்ப்பார்கள் அவரது வேண்டுகோளை நிராகரித்துவிட்டு தொடர்ந்து முழக்கம் எழுப்பியவாறு இருந்தனர். பின்னர் எதிர்ப்பாளர்கள் அந்த இடத்திலிருந்து வெளியேறினர். இந்த கருத்துக் கேட்பு கூட்டம் வெறும் கண்துடைப்பு என்று அவர்கள் வர்ணித்தனர். இதையடுத்து ஒரு மணி காலதாமதத்துக்குப் பின்னர் கருத்துக் கேட்பு கூட்டம் தொடங்கியது.

இந்த சம்பவத்துக்கு அமைச்சர் ரமேஷ் வேதனை தெரிவித்தார். இதற்கு முன் நடைபெற்ற 5 கருத்துக் கேட்பு கூட்டங்களும் அமைதியாக நடந்தன என்று அவர் கூறினார்.

எந்தவொரு நிறுவனத்தின் பிரதிநிதியாகவோ, தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதியாகவோ இங்கு நான் வரவில்லை. மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காய் விவகாரத்தில் பாரபட்சமற்ற முறையில் அனைவரது கருத்துகளையும் கேட்கவே நான் விரும்புகிறேன். பொது மக்கள், விவசாயிகள் மற்றும் நிபுணர்கள் என அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டு அதன், அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் ரமேஷ் கூறினார்.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காய் குறித்து பொது மக்களின் கருத்தறியும் கூட்டம் முதலில் கொல்கத்தாவில் கடந்த 13-ம் தேதி நடைபெற்றது. அங்கும் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதுபோல் ஜனவரி 29-ம் தேதி சண்டீகரில் கூட்டம் நடைபெற்றது. இதிலும் எதிர்ப்புக் குரலே ஓங்கி ஒலித்தது.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காய் உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கும். மேலும் நிலத்தின் வளத்தை கெடுத்துவிடும். விதைக்கு தனியார் நிறுவனங்களைச் சார்ந்திருக்க வேண்டும் என்று கூறி அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் வாதிடுகின்றனர். ஆனால் நல்ல விளைச்சல் இருக்கும். நோய் தாக்கம் குறைவாக இருக்கும் என்பது ஆதரிப்பவர்களின் வாதம்.

**விளை நிலங்களை கையகப்படுத்த தடை: உயர் நிலைக்குழு பரிந்துரை**

First Published : 01 Feb 2010 01:30:30 AM IST



புதுதில்லி, ஜன. 31: சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு விளை நிலங்களை கையகப்படுத்துவதற்கு தடை விதிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வருமாறு அரசுக்கு உயர் நிலைக் குழு பரிந்துரைத்துள்ளது. மேலும் பொதுச் சொத்துக்களை பொருளாதார மண்டலங்களுக்குப் பயன்படுத்துவதற்கும் தடை விதிக்க வேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படுவதால் பாதிக்கப்படும் விவசாயிகள் மற்றும் பழங்குடியினருக்கு உரிய நிவாரணம் அளிக்கப்படவில்லை என்பதையும் நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டல திட்டத்தால் விளை நிலங்கள் வீணடிக்கப்பட்டு வருவதாக பரவலாக புகார் கூறப்பட்டு வந்தது. மேலும் கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

சிறப்புப் பொருளாதார மண்டல திட்டத்தை விளை நிலங்களை காவு கொடுக்கும் திட்டமாக மாற்றப்பட்டுவிட்டது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மூலம் பல ஆயிரக்கணக்கான ஹெக்டேர் விளைநிலங்கள் வீணடிக்கப்பட்டுவிட்டன என்றும் புகார் கூறப்பட்டது.

இதையடுத்து சிறப்பு பொருளாதார மண்டலங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக மத்திய ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 2007-ம் ஆண்டு நிபுணர் குழு அமைக்கப்பட்டது.

÷இந்தக் குழு ஆய்வு செய்து அரசிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையில் விளை நிலங்களை கையகப்படுத்த தடை விதிப்பது உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன.

சிறப்பு பொருளாதார மண்டல பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டுக்குள் வராது என்பதையும் உள்ளாட்சிகளுக்கு வரி செலுத்த தேவையில்லை என்பதையும் நிபுணர் குழு குறை கூறி உள்ளது. இதுபோல் சிறப்பு பொருளாதார மண்டலங்களால் சுற்றுச் சூழல் விவகாரம், தண்ணீர் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் உள்ள குறைகளையும் இந்தக் குழு சுட்டிக்காட்டி உள்ளது.

**விரைவில் விலைகள் குறையும்: மத்திய அமைச்சர் பவார் நம்பிக்கை**

First Published : 01 Feb 2010 01:45:32 AM IST



புதுதில்லி, ஜன. 31: அடுத்த சில நாள்களில் விலைகள் படிப்படியாக குறையத் தொடங்கும் என்று வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் நம்பிக்கை தெரிவித்தனர்.

ராபி பருவத்தில் நல்ல விளைச்சல் உள்ளது. மேலும் சர்க்கரை, பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. எனவே விரைவில் விலைகள் குறையும் என்று பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

சர்க்கரை, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கடுமையாக உ.யர்ந்துள்ளதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இதனால் நடுத்தர மக்களும், மாதச் சம்பளக்காரர்களும் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மைதான் என்று அவர் கூறினார்.

பருவ மழை ஏமாற்றியதால் பல இடங்களில் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதுவும் விலை உயர்வுக்கு ஓர் காரணம் என்றார் அவர்.

அண்மைக்காலமாக விலை உயர்வுப் பிரச்னை மத்திய அரசுக்கு பெரும் தலைவலியாக இருந்து வருகிறது. விலை உயர்வுக்கு மத்திய வேளாண் மற்றும் உணவு அமைச்சர் சரத் பவாரின் தவறான கொள்கைகளும் மோசமான நிர்வாகமும்தான் காரணம் என்று எதிர்க்கட்சிகள் குறை கூறி வருகின்றன.

இந்த நிலையில் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், விலைகள் குறையும் என்று கூறியுள்ளார் பவார்.

கடந்த 6 ஆண்டுகளாக நான் வேளாண் மற்றும் உணவு அமைச்சராக இருந்த வருகிறேன். ஆனால் இதற்கு முன் யாரும் என்னைக் குறை சொல்லியதில்லை என்றார் அவர்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் கோதுமை, அரிசிக்கு 2003-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விலைதான் தற்போதும் நீடிக்கிறது.

ராபி பருவத்தில் விளைச்சல் நன்றாக உள்ளது. மேலும் சர்க்கரை,  பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. எனவே வரும் நாள்களில் படிப்படியாக விலைகள் குறையும் என்றார்.

நெல் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துமாறு காங்கிரஸ் ஆட்சியில் அல்லாத பிற மாநில அரசுகள் மத்திய அரசுக்கு கடிதம் எழுதி உள்ளன. அதன் எதிரொலியாகயும் விலைகள் உயர்ந்துள்ளன என்று பவார் கூறினார்.

இனிப்பான செய்தி:÷பொது மக்களுக்கு இனிப்பான செய்தி என்னவெனில் பருப்பு விலைகள் படிப்படியாக குறைந்து கொண்டே வருகின்றன. சர்க்கரையும் விலை குறையத் தொடங்கி உள்ளது என்று அவர் கூறினார்.

ராபி பருவத்தில் கோதுமை நல்ல விளைச்சல் ஏற்பட்டுள்ளது. நெல்லும் அதிகமாக விளைந்துள்ளது. எனவே உணவு தானியங்களின் கையிருப்பும் அதிகரித்துள்ளது என்றார்.

விளைச்சல் அதிகமாக உள்ளதால் நாளுக்கு நாள் நிலைமை மேம்பட்டு வருகிறது. சர்க்கரையை பொருத்தவரை சர்வதேச சந்தையில் விலை குறைந்து வருவதால் அதன் எதிரொலியாக இந்தியாவிலும் சர்க்கரை விலை குறைந்து வருகிறது. கடந்த சில நாள்களுக்கு முன்னர் குவிண்டால் விலை ரூ. 4000 என்பது தற்போது 3,600 ஆக குறைந்துள்ளது என்றார் பவார்.

பல இடங்களில் கரும்பு விவசாயிகள் வேறு பயிர்களுக்கு மாறிவிட்டனர். இதை மகாராஷ்டிரத்தில் பார்த்தேன். இதுவும் விலை உயர்வதற்கு ஒரு காரணம். ஆனால் தற்போது பிரேசில் நாட்டில் கரும்பு அமோகமாக விளைந்துள்ளது. இதனால் விரைவில் அங்கிருந்து சர்க்கரை இறக்குமதி செய்ய முடியும் என்றார்.

பருப்பு சப்ளை செய்யும் பெரிய நாடுகளில் கூட பருப்பு தானிய வகைகள் உற்பத்தி குறைந்துள்ளதால் அதன் தாக்கம் இந்திய சந்தைகளில் எதிரொலித்தது என்று அவர் கூறினார். அரசு நிறுவனங்கள் பருப்பை இறக்குமதி செய்து, கிலோவுக்கு  ரூ. 50 நஷ்டத்தில் பொது விநியோகத்துக்கு வழங்கப்படுகிறது. இந்த வகையில் ரூ. 4000 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் ராபி பருவத்தில் கடந்த 20-ம் தேதி வரை 193 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எனவே விலையை குறைக்க அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விரைவில் விலைகள குறையும் என்றார் பவார்.

### கரூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 1100

First Published : 01 Feb 2010 05:51:52 AM IST

கரூர், ஜன. 31: கரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் நெல் கொள்முதல் நிலையங்களில் குவிண்டால் நெல்லுக்கு ரூ. 1100 வழங்கப்படுகிறது என்றார் ஆட்சியர் ஜெ. உமா மகேஸ்வரி.

தமிழக அரசு உத்தரவின்படி விவசாயிகளின் நலன் கருதி கரூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் விளைந்த நெல்லை கொள்முதல் செய்ய தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

குளித்தலை வட்டத்தில் நங்கவரம், நச்சலூர், பணிக்கம்பட்டி, குளித்தலை மற்றும் முசிறியிலுள்ள குளித்தலை கிடங்கு; கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் லாலாப்பேட்டை, கோவக்குளம், சிவாயம் கிடங்குகள்; கரூர் வட்டத்தில் கரூர், தொழில்பேட்டை கிடங்குகல் ஆகியன சனிக்கிழமை திறக்கப்பட்டுள்ளன.

கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத் தொகை சேர்த்து நெல் கிரேடு ஏ ரகத்துக்கு குவிண்டாலுக்கு ரூ. 1100-ம், பொது நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 1050-ம் வழங்கப்படும்.

நெல் கொள்முதல் செய்யும் இடத்தில் 17 சத ஈரப் பதத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ள திரிபுகளுக்கு மிகாமல் நெல் கொள்முதல் செய்யப்படும். எனவே, விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடைய வேண்டும் என்று ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### மீன் வளர்ப்புத் தொழில்: தொழிலதிபர்களுக்கு அழைப்பு

First Published : 01 Feb 2010 05:51:34 AM IST

கரூர், ஜன. 31: லாபகரமான மீன் வளர்ப்புத் தொழிலில் ஈடுபட தொழிலதிபர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கரூர் மாவட்ட ஆட்சியர் ஜெ. உமா மகேஸ்வரி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மீன் குஞ்சு உற்பத்தியில் தன்னிறைவு அடைய அரசு கட்டுப்பாட்டிலுள்ள மீன் பண்ணைகளின் தரத்தை உயர்த்தவும், தனியார் நிறுவனங்களுக்கு மானியம் அளித்தும் மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்க மீன் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் 50 சத மானியத்தில் மீன் வளர்ப்பு நிலையம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, மீன் பண்ணை அமைக்க விரும்பும் நபர்களிடம் 1 ஹெக்டேர் நிலம் சொந்தமாக இருக்க வேண்டும். குத்தகை நிலமாக இருப்பின் 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் குத்தகையைப் பதிவு செய்திருக்க வேண்டும்.

அந்த நிலம், வெள்ளத்தால் பாதிக்காத வகையிலும், போதுமான அளவு நீர் வசதி மற்றும் சாலை வசதிகளுடனும், நீர் வரத்துப் பெற மின் வசதி அல்லது இதர வசதிகளும் பெற்றிருக்க வேண்டும்.

தொழிலில் ஈடுபட விரும்பும் பயனாளி, மீன்வள மேம்பாட்டு முகமையில் உறுப்பினராகவும், மீன் குஞ்சு வளர்ப்பில் போதியப் பயிற்சி பெற்றவராகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

எனவே, கரூர் மாவட்டத்தில் ஆர்வமுள்ள- மீன்வள மேம்பாட்டு முகமையில் தனியார் மீன் வளர்ப்பாளர்கள் உடனடியாக மீன் துறை உதவி இயக்குநர், (உள்நாட்டு மீன் வளம்), எண். 59, பைபாஸ் சாலை, மன்னார்புரம், திருச்சி என்ற முகவரியை அனுகலாம்.

மேலும் விவரங்களுக்கு 0431-2421173 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்று ஆட்சியர் குறிப்பிட்டுள்ளார்.

**மகளிர் குழுக்களுக்கு ஆடுகள் வாங்க கடனுதவி**

First Published : 01 Feb 2010 05:50:18 AM IST

கரூர், ஜன. 31: கால்நடை பராமரிப்புத் துறை மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆடுகள் வாங்க ரூ. 2.88 லட்சம் கடனுத வி வழங்கப்படவுள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறை செம்மறி ஆடுகளை வழங்கி வருகிறது.

இத் திட்டத்தின் கீழ் தற்போது கரூர் மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களிலிருந்து தலா ஒரு மகளிர் குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்களுக்கு ரூ. 36 மதிப்பிலான 20 பெட்டை ஆடுகள், 1 கிடா ஆடு அடங்கிய செம்மறியாடு குழு வழங்கப்படும்.

இந்த கடனுதவியில் ரூ. 18 ஆயிரம் கால்நடை பராமரிப்புத் துறையின் மானியமாகவும், மீதமுள்ள ரூ. 18 ஆயிரம் கடனாகவும் வழங்கப்படும்.

இதற்காக தற்போது அரவக்குறிச்சி ஒன்றியம் இசட்.ஆலமரத்துப்பட்டி ரோஜா மகளிர் குழு, குளித்தலை ஒன்றியம், கணக்கப்பிள்ளையூர் விஷ்ணு குழு, க.பரமத்தி கரைப்பசுபதிபாளையம் ஸ்ரீ தங்காயி அம்மன் குழு, கிருஷ்ணராயபுரம் சின்னகுளத்தூர் வெண்ணிலா குழு, தோகைமலை மாரிபாறைப்பட்டி அன்னை ஜான்சி ராணி குழு, கடவூர் ஒன்றியம் காணியாளம்பட்டி வெற்றி மாதா குழு, தாந்தோன்றிமலை ஒன்றியம் காளிபாளையம் பவுளியம்மன் குழு, கரூர் ஒன்றியம் மேற்கூர் விநாயகா மகளிர் குழு ஆகியவை தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களுக்கு விரைவில் தலா ரூ. 36 ஆயிரம் கடனுதவி வழங்கப்படும் என்றார் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் எல். பழனிவேல்.

**மாவட்ட உழவர் சந்தைகளில் ஜனவரியில் ரூ.5.81 கோடிக்கு விற்பனை**

First Published : 01 Feb 2010 12:26:58 AM IST

சேலம், ஜன.31: சேலம் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் ஜனவரி மாதத்தி6ல் ரூ.5.81 கோடி மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சேலத்தில் அஸ்தம்பட்டி, சூரமங்கலம், தாதகாப்பட்டி, அம்மாப்பேட்டை, ஆட்டையாம்பட்டி, ஆத்தூர், மேட்டூர் மற்றும் எளம்பிள்ளை ஆகிய பகுதிகளில் 8 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த உழவர் சந்தைகளுக்கு ஜனவரி 1-ம் தேதியில் இருந்து 31-ம் தேதி வரை 27 ஆயிரத்து 404 உழவர்கள் தங்களது காய்கறிகளை கொண்டு வந்துள்ளனர்.

இவர்கள் மூலம் 42 லட்சத்து 61 ஆயிரம் கிலோ எடையுள்ள காய்கறிகள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.5.81 கோடி. இந்த சந்தைகள் மூலம் 8 லட்சத்து 16 ஆயிரம் நுகர்வோர்கள்

பயன் அடைந்துள்ளனர் என்று வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) நாகராஜன் தெரிவித்துள்ளார்.

**பல்சேவை மையமாக விளங்கும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம்**
First Published : 01 Feb 2010 01:02:27 AM IST

திருவண்ணாமலை, ஜன. 31: பொதுமக்கள், விவசாயிகளுக்கு பயன் தரும் வகையில் பல்சேவை மையமாக பொன்விழா கண்ட செ.நாச்சிப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் இயங்கி வருகிறது.

கிராம மக்களின் நலனுக்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றன. பயிர்க்கடன், நகைக் கடன்

வழங்குதல், வைப்பு நிதி சேமிப்பு, தனி நபர் கடன் வழங்குதல் என பல சேவைகளை புரிந்துவருகின்றன.

செங்கம் தாலுகா செ.நாச்சிப்பட்டில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் கடந்த 1958-ல் தொடங்கப்பட்டது. இச்சங்கத்தின் கீழ் செ.நாச்சிப்பட்டு, மண்மலை, கரியமங்கலம், கொட்டகுளம் உள்ள 4 வருவாய் கிராமங்களும், 17 குக்கிராமங்களும் உள்ளன.

இக்கடன் சங்கத்தின் கீழ் 4 முழு நேர மற்றும் 5 பகுதி நேர ரேஷன் கடைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 3,649 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளன. மொத்தம் 5,205 அ வகுப்பு உறுப்பினர்களும், 3,602 இணை உறுப்பினர்கள் என மொத்தம் 8,807 பேர் உள்ளனர். உறுப்பினர்களின் பங்குத் தொகை நிலுவையாக ரூ.43.07 லட்சம் உள்ளது. வைப்பு நிதியாக ரூ.291 கோடி பெறப்பட்டுள்ளது.

மேலும், பயிர்க்கடனாக ரூ.78.23 லட்சம், நகை பயிர்க்கடன் ரூ.57.3 லட்சம், நகைக்கடனாக ரூ.4.6 கோடி, 112 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1 கோடியும் தரப்பட்டுள்ளது.

இதுதவிர பேறுகால கடன், தானிய ஈட்டுக்கடன், வைப்புகள் மீது கடன், மகளிர் சிறுவ வணிகக் கடன், மத்தியகாலக் கடன என மொத்தம் ரூ.6.7 கோடி கடன் தரப்பட்டுள்ளது.

பல்சேவை மையம்

வழக்கமான பணிகள் தவிர இக்கூட்டுறவு கடன் சங்கத்தில் பல்வேறு சிறப்பு சேவைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுச் சேவை மையம்: பொதுச் சேவை மையத்தில் அரசு திட்டங்களுக்கான விண்ணப்பங்கள், சிட்டா அடங்கல் நகர், பாஸ்போர்ட் புகைப்படம் எடுத்தல், இ-மெயில் அனுப்புதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அக்ரி கிளீனிக்

அக்ரி கிளீனிக் எனப்படும் வேளாண் பயன்பாட்டு மையம் சார்பில் பவர் டில்லர் குறைந்த வாடகைக்கு தருதல், விவசாயிகளின் மண், நீர் மாதிரிகளை சோதித்து அறிக்கை தருதல் பணிகள் செய்யப்படுகின்றன.

ஆதார விதை நெல் உற்பத்தி

தரமான நெல் விதைகள் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் 10 விவசாயிகள் மூலம் 7 ஏக்கரில் ஆதார விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

இவை தவிர விதை நெல் விற்பனை, வெளிச்சந்தை அரிசி வியாபாரம், காசோலை வசூலித்து தருதல், இப்கோ-டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து காப்பீடு செய்யும் முகவர் பணி என பல்வேறு பணிகளை செ.நாச்சிப்பட்டு கூட்டுறவு கடன் சங்கம் மேற்கொண்டுள்ளது. மேலும் 6 உழவர் மன்றங்கள், 2 விவசாய கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், தொடங்கப்பட்டு கடன் தரப்பட்டுள்ளன.

சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து தனி அலுவலர் நாராயணசாமி, செயலர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கூறியது:

எங்கள் சங்கம் தொடர்ந்து லாபத்துடன் இயங்கி மாவட்டத்திலேயே 14 சதவீதம் ஈவுத் தொகையை உறுப்பினர்களுக்கு அளித்து வருகிறது. மண்டல இணைப்பதிவாளர் சுப்பிரமணி, மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் குழந்தைவேலு ஆகியோர் முயற்சியால் சொந்த நிதியிலேயே எங்கள் சங்கத்தை இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

செங்கத்தில் விரைவில் மருந்துக் கடை ஒன்றை நிறுவவுள்ளோம். அதேபோல்

எங்கள் சங்கத்திலேயே மின்சார, தொலைபேசி கட்டணங்களை செலுத்தும் வசதியும் செய்வது குறித்து பரிசீலித்து வருகிறோம். தொடர்ந்து 10 ஆண்டுகளாக மாவட்டத்திலேயே சிறந்த கூட்டுறவு சங்கம் என்ற விருதையும் பெற்று வருகிறோம் என்றனர்.

### இயற்கை வேளாண்மை: செங்கத்தில் நாளை கருத்தரங்கு

First Published : 01 Feb 2010 01:02:55 AM IST

திருவண்ணாமலை, ஜன. 31: திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவுத் துறை சார்பில் இயற்கை வேளாண்மை (அங்ககச் சான்றளிப்பு பயிற்சி) குறித்து கருத்தரங்கம் செங்கம் செ.நாச்சிப்பட்டு சக்தி பாலிடெக்னிக் வளாகத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் ராஜேந்திரன், கூட்டுறவு இணைப்பதிவாளர் சுப்பிரமணியம்

அறிவுரையின் பேரில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கச் செயலர் தலைமையில் விவசாயிகளுக்கான கருத்தரங்கம் நடத்தப்படுகிறது.

மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், கிரிப்கோ உர நிறுவனம் சார்பில் இக்கருத்தரங்கம் நடைபெறுகிறது.

பெரணமல்லூர்: அதே போல் வந்தவாசி தாலுகா பெரணமல்லூர் பிராமணர் தெருவில் உள்ள டிகேஎம் மணிமேகலை திருமண மகாலில் புதன்கிழமை காலை 10 மணிக்கு கருத்தரங்கம் நடக்கிறது.

கோவை மற்றும் வேலூர் வேளாண்மை அங்ககச் சான்றளிப்பு துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு செயல்விளக்கப் பயிற்சி அளிக்கின்றனர்.

இயற்கை வேளாண்மை ஆர்வலர்கள், விவசாயிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம் என மண்டல இணைப் பதிவாளர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**துவரம் பருப்பு விலை தொடர்ந்து சரிவு**

First Published : 01 Feb 2010 02:22:12 AM IST



சென்னை, ஜன. 31: துவரம் பருப்பின் விலை தொடர்ந்து சரிந்து வரும் நிலையில் சனிக்கிழமை சந்தை நிலவரப்படி ஒரு மூட்டை (100 கிலோ) ரூ. 6,300}க்கு விற்பனையாகிறது.

கடந்த 15 நாள்களுக்கு முன்பு ரூ. 7, 500}ல் இருந்த துவரம் பருப்பு மூட்டை இப்போது ரூ. 1, 200 வரை விலை சரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வரும் வாரங்களில் இதன் விலை ரூ. 5, 500 வரை சரியும் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதே போல் இரண்டாம் வகை துவரம்பருப்பும் கடந்த 2 நாள்களுக்குள் மூட்டைக்கு ரூ. 500 குறைந்து இப்போது ரூ. 5,500}க்கு விற்பனையாகிறது.

குஜராத், மத்தியப்பிரதேசம், உத்திரபிரதேசம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட வட மாநிலங்களில் துவரம்பருப்பு நல்ல விளைச்சல் கண்டுள்ளதாலும், தொடர்ந்து புது வரவு பருப்புகள் வந்து கொண்டிருப்பதாலும் விலை குறைந்து வருவதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

வெளிநாட்டு துவரம் பருப்பும் கடும் வீழ்ச்சி: உள்நாட்டு துவரை விலை தொடர்ந்து குறைந்து வருவதைத் தொடர்ந்து தான்சானியா, அமெரிக்கா, கனடா, துருக்கி உள்ளிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் துவரை விலையும் குறைந்துள்ளது. மியான்மரில் இருந்து துவரை இறக்குமதி செய்வது தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தான்சானியா துவரம் பருப்பு மூட்டை ரூ. 5,200}ல் இருந்து ரூ. 4,900}ஆகவும், அமெரிக்கா, கனடா, துருக்கி வகை துவரம் பருப்பு மூட்டை ரூ. 4,200}ல் இருந்து ரூ.3,900}ஆகவும் குறைந்துள்ளது.

உளுத்தம் பருப்பு மூட்டை ரூ. 6,700}ல் இருந்து ரூ.6,300}ஆகவும், மியான்மர் உளுத்தம் பருப்பு ரூ. 6,100}ல் இருந்து ரூ. 5,800}ஆகவும் குறைந்து விற்பனையாகிறது.

பாசிப்பருப்பு விலையில் மாற்றம் இல்லை: கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் பாசிப்பயறு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இதன் விலையில் பெரிய மாற்றம் இல்லை. முதல் ரக பாசிப்பருப்பு ரூ. 7,700, 2}ம் ரக பாசிப்பருப்பு ரூ. 7,300}க்கு விற்பனையாகிறது.

குறைந்தது மிளகாய் விலை: (பழைய விலை அடைப்புக்குள்) குண்டு மிளகாய் (பருவட்டு) ஒரு கிலோ ரூ. 120 (130), குண்டு மிளகாய் (சிறியது) ரூ. 100 (ரூ. 115), பழைய குண்டு மிளகாய் ரூ. 70, நீள மிளகாய் ரூ. 70 ரூ.(80)}க்கு விற்பனையாகிறது. தனியா (மல்லி) ரூ. 50 (ரூ. 60), பூண்டு (பருவட்டு) ரூ. 70 (ரூ. 80), பூண்டு (நடுத்தரம்) ரூ. 60 (ரூ.

70), புளி (முதல் ரகம்) ரூ. 50 (ரூ. 60), புளி (2}ம் ரகம்) ரூ. 40 (ரூ. 50), முதல் ரக வெல்லம் ரூ. 40 (45), 2}ம் ரக வெல்லம் ரூ. 35 (ரூ. 40), அச்சு வெல்லம் ரூ. 40 (45).

**தோவாளையில் மலரியல் ஆராய்ச்சி நிலையம்: அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் திறந்து வைத்தார்**

First Published : 01 Feb 2010 03:35:32 AM IST

நாகர்கோவில், ஜன. 31: கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் நாட்டின் முதலாவது மலரியல் ஆராய்ச்சி நிலையத்தை, மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்தார்.

விழாவுக்கு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்தார். மலரியல் ஆராய்ச்சி நிலையத்தை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் திறந்துவைத்தார். மேலும், புதிய ஆய்வகக் கட்டடத்துக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

விழாவில், சமூக நலத்துறை, சுகாதாரத் துறை, வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை உள்ளிட்ட துறைகள் சார்பில் பயனாளிகளுக்கு ரூ. 71 லட்சத்து 61 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், 51 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1 கோடியே 2 லட்சம் கடனுதவிகளையும் மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் என். சுரேஷ்ராஜன் வழங்கினார்.

விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ முன்னிலை வகித்தார். ஹெலன் டேவிட்சன் எம்.பி., எம்எல்ஏக்கள் ராஜன், ஜெயபால், ஜான் ஜேக்கப், மாவட்ட ஊராட்சித் தலைவி டி. அஜிதா, தமிழ்நாடு மீனவர் நலவாரிய துணைத் தலைவர் இரா. பெர்னார்டு, தோவாளை மலரியல் ஆராய்ச்சி நிலையத் தலைவர்

சொர்ணப்ரியா உள்ளிட்டோர் பேசினர்.

**உழவர் சந்தைகள் நவீனமயமாக்கப்படும்**

First Published : 01 Feb 2010 03:35:08 AM IST

கன்னியாகுமரி, ஜன. 31: தமிழகத்தில் உள்ள அனைத்து உழவர் சந்தைகளும் நவீன மயமாக்கப்படும் என மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கூறினார்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் மலரியல் ஆராய்ச்சி நிலையத்தைத் திறந்துவைப்பதற்காக சனிக்கிழமை இரவு கன்னியாகுமரி வந்த அவர், இங்கு செய்தியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டி:

தமிழகத்தில் திமுக ஆட்சியில் உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டன. தமிழகம் முழுவதும் தற்போது 103 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு புதிதாக 50 உழவர் சந்தைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு இதுவரை 49 உழவர் சந்தைகள் செயல்பாட்டில் உள்ளன. மாநிலம் முழுவதும் முதல் கட்டமாக 20 உழவர் சந்தைகளில் ரூ. 1 கோடியே 33 லட்சம் செலவில் காய்கறிகள் கெட்டுப் போகாமல் இருக்க குளிர்சாதனக் கிட்டங்கி வசதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிட்டங்கியிலும் 2 டன் முதல் 4 டன் வரையிலான காய்கறிகள் பாதுகாக்கப்படும்.

நுகர்வோரின் தேவையைக் கருதி மேலும் 5 இடங்களில் இதுபோன்ற வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், எங்கெங்கு உழவர் சந்தைகள் தேவைப்படுகிறதோ அங்கு புதிய சந்தைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். ஒருசில இடங்களில் உழவர் சந்தைகள் சரிவர செயல்படாத நிலை உள்ளது. அவற்றை மக்கள் தேவைக்கேற்ப மாற்று இடத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார் அவர்.

**செங்கல்பட்டில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 01 Feb 2010 12:12:33 AM IST

காஞ்சிபுரம், ஜன. 31: செங்கல்பட்டில் விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (பிப்ரவரி 2) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சந்தோஷ் கே.மிஸ்ரா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

செங்கல்பட்டு பழைய பஸ் நிலையம் அருகே உள்ள ஏழுமலை திருமண மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெறும். ஏற்கெனவே செங்கல்பட்டு கோட்டாட்சியர் அலுவலகத்தில் இக் கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. தற்போது இடம் மாற்றப்பட்டு ஏழுமலை திருமண மண்டபத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் விவசாயிகள், விவசாய சங்கங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்று தங்கள் குறைகளை மனுக்களாக அளிக்கலாம் என்றார் ஆட்சியர்.

**இயற்கை உரம் தயாரிக்க உரிமம் அவசியம்: இணை இயக்குநர்**

First Published : 01 Feb 2010 12:12:20 AM IST

காஞ்சிபுரம், ஜன. 31: காஞ்சிபுரத்தில் இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் தயாரிக்க உரிமம் பெறுவது அவசியம் என்று வேளாண் இணை இயக்குநர் எஸ்.எம். செல்வப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

உரக் கட்டுப்பாட்டு சட்டத்தின்படி இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் தயாரிப்பவர்கள் உரிமம் பெறுவது அவசியம். தற்போது இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் தயாரிப்பவர்களுக்கு உரிமம் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

எனவே, இத்தகையை உரங்கள் தயாரிப்பவர்கள் உடனடியாக உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். உரிமம் இல்லாமல் உரம் தயாரிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

**மண்புழு உரம் உற்பத்தியாளர்களுக்கு பதிவுச் சான்று அவசியம்: இணை இயக்குநர்**

First Published : 01 Feb 2010 05:27:49 AM IST

ராமநாதபுரம், ஜன. 31: மண்புழு உரம், நகர கம்போஸ்ட் மற்றும் உயிர் உரங்களின் உற்பத்தியாளர்கள் வேளாண்மைத் துறையில் பதிவுச் சான்று பெற வேண்டும் என ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் என்.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சனிக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மண்புழு உரம், நகர கம்போஸ்ட் ஆகியவை அங்கக உரங்கள் என்பதாகும். அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா மற்றும் ரைசோபியம் ஆகியவை உயிர் உரங்கள் ஆகும்.

அங்கக உரங்கள், உயிர் உரங்கள் ஆகியவற்றிற்கு தர நிர்ணயங்கள் குறித்து அரசு உத்தரவு வெளியிட்டுள்ளது. 2008 மார்ச் மாதம் முதல் அங்கக மற்றும் உயிர் உரங்களை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வேளாண்மைத் துறை மூலம் தடையில்லா சான்று வழங்கப்பட்டது.

தற்போது அங்கக உரங்கள் மற்றும் உயிர் உரங்களை தயார் செய்யவும் விற்பனை செய்யவும் உரிமம் எனப்படும் பதிவுச் சான்றிதழ் மிகவும் அவசியம்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் தனியாரும் அங்கக மற்றும் உயிர் உரம் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே இதனை தயாரிப்போர் மற்றும் விற்பனை செய்வோர் உரிமம் பெற, அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிறந்த கால்நடைகளுக்குப் பரிசு**

First Published : 31 Jan 2010 07:01:49 AM IST

சிவகங்கை,ஜன.30: நாடாமங்கலம் கிராமத்தில் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முகாமில் ஆடு, மாடுகளுக்குத் தடுப்பூசி மற்றும் சினை ஊசியும் கோழிகளுக்கு தடுப்பூசி, குடற்புழு நீக்கம் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

சிறந்த கால்நடை கிடேரி கன்றுகளுக்கு நாடாமங்கலம் ஊராட்சிமன்றத் தலைவர் ஜெ.சி.துரைப்பாண்டி பரிசு வழங்கினார். கால்நடைகளுக்கு பெரியகண்ணனூர் கால்நடை உதவி மருத்துவர் ராஜேஷ் சிகிச்சை அளித்தார்.

உதாரப்புலி, மாடக்கோட்டை, நாடாமங்கலம் ஆகிய கிராமங்களிலிருந்து கால்நடைகள் கொண்டுவரப்பட்டன. இதில் கால்நடை ஆய்வாளர் மஞ்சுளா, கால்நடை பராமரிப்பு உதவியாளர் நாகராஜன், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு வேளாண்மை கருவிகளைக் கையாள பயிற்சி**

First Published : 01 Feb 2010 03:28:46 AM IST

திருநெல்வேலி, ஜன. 31: திருநெல்வேலி மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளைக் கையாளுதல், பராமரித்தல் குறித்த பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் எஸ். சந்திரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளைக் கையாளுதல் மற்றும் பயிற்சி அளிக்க வேளாண்மைப் பொறியியல் துறைக்கு அரசு ரூ. 1.08 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. வேளாண்மை இயந்திரமாக்கலை விவசாயிகளிடம் பிரபலப்படுத்துதல் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல் இதன் நோக்கம்.

இப் பயிற்சியைப் பெறும் விவசாயிகள் வேளாண்மையில் இயந்திரங்களைப் பயன்படுத்தி பணிகளை வேகமாகவும், முறையாகவும் முடிக்கலாம். இதனால், விவசாயிகளுக்கு செலவு குறைவதுடன் வருவாயும் பெருகும்.

இப் பயிற்சியானது ஏர்வாடி டி.வி.எஸ். பண்ணையில் பிப். 3 முதல் 17-ம் தேதிவரை நடைபெற உள்ளது. பயிற்சியில், பயிர்ப் பாதுகாப்புக் கருவி தேர்வு செய்தல், இயக்குதல், பராமரித்தல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படும்.

பழவூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பிப். 10 முதல் 24-ம் தேதிவரை நடைபெற உள்ள பயிற்சியில் பாசனத்துக்கான பம்ப்செட்கள் குறித்தும், சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம் மற்றும் பாசன நீரைச் சேமிக்கும் கருவிகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சியில் சேருவோருக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட உதவித்தொகை வழங்கப்படும்.

எனவே, ஆர்வம் உள்ள விவசாயிகளும், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களும் சேரன்மகாதேவியில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை அணுகலாம் என்றார் அவர்.

**கோழிகளுக்கு தடுப்பூசி முகாம்**

First Published : 01 Feb 2010 03:28:30 AM IST

திருநெல்வேலி, ஜன. 31: திருநெல்வேலி மாவட்டத்தில் 1.90 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் மு. ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பிப். 2-ம் தேதி முதல் 15 முடிய கோழிகளுக்கு, கோழிக் கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 1.90 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம் முகாம் 2 வாரம் நடைபெறும்.

அனைத்து கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் பகுதிகளில் கிராமங்கள்தோறும் தினமும் தடுப்பூசி போடும் முகாம் நடத்தப்படும்.

கோழி வளர்ப்போர் தங்கள் பகுதியில் கோழிகளுக்கு தடுப்பூசி முகாம் நடைபெறும்போது, இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளார் ஆட்சியர்.

தினமலர்

**சர்க்கரை, பருப்பு விலை விரைவில் குறைந்து விடும் : நம்பிக்கையூட்டுகிறார் மந்திரி பவார்**

பிப்ரவரி 01,2010,00:09 IST



புதுடில்லி : ""ராபி பருவத்தில் உணவுதானிய உற்பத்தி நன்றாக இருக்கும் என்பதாலும், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரை மற்றும் பருப்பு வகைகள் தாராளமாக கிடைக்கும் என்பதாலும் வரக்கூடிய நாட்களில் விலைவாசி குறையும்,'' என மத்திய உணவு அமைச்சர் சரத் பவார் கூறியுள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்து விட்டதாக, மத்திய அரசை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. இந்நிலையில், செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த மத்திய விவசாயம் மற்றும் உணவு அமைச்சர் சரத் பவார் கூறியதாவது:நெல்லுக்கான ஆதரவு விலையை அதிகரிக்க வேண்டும் என, காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகள் பல, மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்தன. இது தொடர்பாக கடிதம் எழுதின. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதும் விலைவாசி உயர்வுக்கு ஒரு முக்கிய காரணமாகும். இருந்தாலும், ராபி பருவத்தில் விளைச்சல் நன்றாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. நல்ல விளைச்சல் இருந்தால், வரக்கூடிய நாட்களில் உணவு, தானியங்களின் விலை குறையும்.கடந்த 20ம் தேதி வரை 193 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இது முந்தைய ஆண்டு 198 லட்சம் டன்னாக இருந்தது.அதேபோல், இறக்குமதி செய்யப்படும் பருப்பு மற்றும் சர்க்கரையும் விரைவில் எளிதில் கிடைக்கும் என்பதால், அவற்றின் விலையும் குறையும். தற்போது பருப்பு மற்றும் சர்க்கரை விலை குறைந்து கொண்டிருக்கிறது.இருந்தாலும், கிலோ இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்ற அளவுக்கு குறையாது. ராபி பருவத்தில் பருப்பு வகைகள் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளன. அதனால், வரக்கூடிய நாட்களில் பருப்பு விலை கணிசமாக குறையும்.பருப்பு உற்பத்தி செய்யும் நாடுகள் பலவற்றிலும், பருப்பு பற்றாக்குறை நிலவியதால், இங்கும் பருப்பு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டு விலை உயர்ந்தது.முன்பேர வர்த்தகத்தில், சர்வதேச சந்தையில் சர்க்கரை குறைந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால், விரைவில் குறைவான விலைக்கு சர்க்கரையை பெற முடியும்.

முதலில் குவிண்டால் ரூ. 4,000 என்ற அளவுக்கு இருந்த சர்க்கரை விலை, கடந்த சில நாட்களில் ரூ.3,600 ஆக குறைந்துள்ளது.பருப்பு மற்றும் சர்க்கரை விலை அதிகரித்தது, சாதாரண மக்களின் பட்ஜெட்டை வெகுவாக பாதித்துள்ளது என்பதை நான் அறிவேன். இருந்தாலும், இந்த நிலைமைக்கு உற்பத்தி குறைவே காரணம். ஜனவரி 2009ல் இருந்ததை விட, சர்க்கரை விலை இரு மடங்கு அதிகரித்து, தலைநகர் டில்லியில் கிலோ 43 ரூபாய்க்கு விற்கிறது. பருப்பு விலையும் கிலோ ரூ.85க்கு உயர்ந்துள்ளது.

நாட்டில் 312 மாவட்டங்களில் போதுமான அளவு மழை பெய்யாததும், சர்க்கரை மற்றும் பருப்பு வகைகளின் உற்பத்தி குறைந்ததும் பொருட்களின் விலை உயர காரணம்.விவசாய அமைச்சக பொறுப்பை நான் ஆறு ஆண்டுகளாக வகித்து வருகிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளாக யாரும் இதுபோன்ற பிரச்னையை எழுப்பவில்லை. யாரும் என்னை விமர்சிக்கவில்லை. கடந்த ஒரு ஆண்டில்தான் நிலைமை மாறியுள்ளது. சர்க்கரை மற்றும் பருப்பு வகைகளை இறக்குமதி செய்தும் விலைவாசி குறையவில்லை.

சாதாரண மக்களுக்கு மலிவான விலையில் உணவு தானியங்களை வழங்க வேண்டும் என்பதற்காகவே, 2003ம் ஆண்டு முதல் பொது வினியோக முறையின் கீழ் வழங்கப்படும் கோதுமை மற்றும் அரிசியின் விலையை அரசு உயர்த்தவில்லை.மேலும், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பல விவசாய உற்பத்தி பொருட்களின் குறைந்தபட்ச ஆதரவு விலை, முந்தைய தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் இருந்ததை விட பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.இவ்வாறு அமைச்சர் பவார் கூறினார்.

**மரபணு கத்தரிக்காய்: மத்திய அமைச்சர் முற்றுகை**

பிப்ரவரி 01,2010,00:00 IST



ஐதராபாத்:மரபணு கத்தரிக்காயை அறிமுகப் படுத்தக்கூடாது என கோரி, மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷை சூழ்ந்து கொண்டு ஐதராபாத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.வறட்சியால் பாதிக்கப்படாத, புழு பூச்சிகளால் தாக்கப்படாத வகையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய் உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விதை நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஏழாண்டு ஆராய்ச்சிக்கு பின்னர் உருவாக்கப்பட்ட இந்த கத்தரிக்காயை, வர்த்தக ரீதியாக சந்தைக்கு கொண்டு செல்வதற்கு பல தரப்பிலும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. தமிழகம், உ.பி., உள்ளிட்ட சில மாநிலங்களில், விவசாய ஆராய்ச்சி மையங்களில் இந்த கத்தரிக்காய் பயிரிடப் பட்டுள்ளது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி., கத்தரிக்காய் தீமையை விளைவிக்குமா, வர்த்தக ரீதியாக இதை பயன்படுத்தலாமா என்பது குறித்து பல தரப்பட்ட வல்லுனர் களை கொண்டு, டில்லி உள்ளிட்ட பல நகரங்களில் மத்திய அரசு ஆலோசனை நடத்தியது. இந்த கூட்டத்தில் உருப்படியான முடிவுகள் ஏதும் எடுக்கப்படவில்லை. காரணம், ஏற்கனவே உள்ள பல்வேறு ரக கத்தரிகளை, இந்த ரகம் வந்தால் பயன்பாட்டில் இல்லாமல் அழிக்கலாம்.

அதே சமயம், கத்தரி விதைக்கு பெரிய கம்பெனிகளை நாடும் நிலை விவசாயிகளுக்கு ஏற்படும்.பூச்சியில்லாத கத்தரிக்காய் என்பது மகிழ்ச்சி தான் என்றாலும், அது எந்த அளவு உண்ணும் உணவாகும் போது மரபணு மாற்றங்களை கொண்டு வரும் என்பது தெரியவில்லை. மேலும், இது அறிமுகப்படுத்தப்பட்ட நாடுகள் மிகவும் ஏழை நாடுகள் அல்லது மக்கள் தொகை மிகவும் குறைந்த நாடுகள் என்பதால், இந்தியாவில் சந்தையைப் பிடிக்க இம்முயற்சியோ என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

ஆந்திர விவசாய கல்லூரி முன்னாள் பேராசிரியர் கே.ஆர்.சவுத்ரி குறிப்பிடுகையில், "புழு, பூச்சிகளை எதிர்க்கும் வகையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட இந்த கத்தரிக்காய், மனிதர்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தும்; இந்த கத்தரி பயிரை பயிர் செய்தால், அந்த நிலத்தின் பயிர் உற்பத்தி திறனும் குறையும்' என்றார். எனவே, இந்த கத்தரிக்காயை சந்தைக்கு கொண்டு வரும் முயற்சியை, மத்திய அரசு கைவிட வேண்டும் என கோரி, ஐதராபாத்தில் விவசாயிகள், தொண்டு நிறுவனத்தினர், விவசாய ஆராய்ச்சியாளர் பலர் போராட்டம் நடத்தினர்.

ஐதராபாத்தில் விவசாய ஆராய்ச்சி மையத்துக்கு, மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் நேற்று வந்தார். அப்போது, அகில இந்திய விவசாய சபை தலைவர் ராமகிருஷ்ணா தலைமையில் போராட்டக்காரர்கள் மத்திய அமைச்சரை சூழ்ந்து கொண்டு, "மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக் காயை அறிமுகப்படுத்தக்கூடாது;

இந்த கத்தரிக்காய்க்கு தடை விதிக்க வேண்டும்' என கோஷமிட்டனர்.அமைதி காக்கும்படி ஜெய்ராம் ரமேஷ் கேட்டுக் கொண்டார்.

பத்து நாட்களுக்குள் விவசாயிகளின் கோரிக்கையை பரிசீலிப்பதாக ஜெய்ராம் கூறினார். இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட ஜனவிஞ்ஞான வேதிகா அமைப்பின் பொதுச் செயலர் வெங்கடேஸ்வர ராவ் குறிப்பிடுகையில், "மரபணு மாற்றம் செய்யப்பட்ட காய்கறிகள், மனிதர் களுக்கும் விலங்குகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்துபவை. எனவே, மரபணு மாற்றம் செய்யப் பட்ட முட்டைகோஸ், காலிபிளவர், தக்காளி, உருளைக்கிழங்கு உள்ளிட்ட அனைத்தையும் எதிர்க்க வேண்டும்' என்றார்.

### தமிழக விவசாயம் இயந்திரமயமாகிறது : வேளாண் கருவிகளுக்கு மவுசு

பிப்ரவரி 01,2010,00:00 IST



கூலியாட்கள் பற்றாக்குறையால் தமிழக விவசாயம், இயந்திர மயமாகி வருகிறது. வேளாண் கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புற விவசாயிகளுக்காக, வேளாண் கருவிகளை வாடகைக்கு விட துவங்கியுள்ளதால் இயந்திர மயமாவது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என 55 லட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், விவசாயத்தில் கூலி குறைவு, விவசாயக் கூலியாக இருப்பதை கவுரவ குறைச்சலாக கருதுவது போன்ற காரணங்களால் விவசாயத்தில் கூலியாட்கள் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.அதை சமாளிக்கவும், உணவு உற்பத்தியை பெருக்கவும், தற்போது நெல் நடவு முதல் அறுவடை வரை அனைத்து பணிகளையும் குறைந்த செலவில் இயந்திரங்கள் மூலம் செய்து முடிக்க வேளாண் துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. கிராமப்புறங்களில் ஏழை விவசாயிகளே அதிகம் உள்ளனர். அவர்களால், வேளாண் கருவிகளை அதிக விலை கொடுத்து வாங்கி பயன்படுத்த முடியாது.

"கருவிகள் வாடகைக்கு கிடைத்தால் வாங்கி பயன்படுத்த வாய்ப்புள்ளது' என்பதால், தற்போது கிராமப்புற தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், வேளாண் கருவிகளை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வாடகைக்கு விட நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்தில் முதன் முறையாக சேலம் மாவட்டம், காடையாம்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம், அக்ரோ சர்வீஸ் சென்டர் துவங்கி அதன் மூலம் தங்கள் சங்கத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு வேளாண் கருவிகளை வாடகைக்கு விடுகிறது.இங்கு 12 லட்சம் ரூபாய் மதிப்பிலான டிராக்டர், நடவு இயந்திரம், களையெடுக்கும் கோனாவீடர், பவர் வீடர், புல் வெட்டும் புஷ் கட்டர் உட்பட 12 கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.இந்த கருவிகளை விவசாயிகள் வாடகைக்கு வாங்கி பயன்படுத்தலாம். விரைவில், மாநிலம் முழுவதும் முக்கிய வேளாண் கூட்டுறவு சங்கங்களும் வேளாண் கருவிகளை கொள்முதல் செய்து வாடகைக்கு விட திட்டமிட்டுள்ளன.

**துவரம் பருப்பு திடீரென விலை சரிவு: சில்லரையில் பலன் வருமா?**

பிப்ரவரி 01,2010,03:13



மத்திய அரசு அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ள நிலையில், துவரம்பருப்பு விலையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. நேற்று ஒரே நாளில் குவிண்டாலுக்கு 1,200 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டது, வியாபாரிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 'விலை மேலும் சரியும்' என்று வியாபாரிகள் மத்தியில் தகவல் பரவி வருவதால், பருப்பு இருப்பு வைத்துள்ள வியாபாரிகள் கிலியடைந்துள்ளனர்.

இந்திய அளவில் 2008 டிசம்பர் முதல் துவரம் பருப்பு விலையில் கடும் உயர்வு ஏற்பட்டது. உச்சகட்டமாக, 2009 டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் கிலோ 88 ரூபாயாக விலை உயர்ந்தது. விரைவில் 100 ரூபாயாக உயரும் என்ற கருத்தும், அப்போது வியாபாரிகள் மத்தியில் நிலவியது. பருப்பு விலை, நேற்று குவிண்டாலுக்கு 1,200 ரூபாய் சரிவு ஏற்பட்டு குவிண்டால் 5,800 ரூபாய்க்கும், கிலோ 58 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. சில்லரை விலையில் ஏற்பட்ட சரிவை தொடர்ந்து மொத்த விலையிலும் சரிவு ஏற்படுவது தான் வழக்கம். ஆனால், வியாபாரிகள் கடந்த மாதமே அதிக விலை கொடுத்து பருப்பை விற்பனைக்காக வாங்கியதால் பருப்பு விலையை குறைக்க முன்வரவில்லை . 'சில்லரை கடைகளில் இன்று முதல் விலை குறைப்பு செய்யப்படும்' என வியாபாரிகள் தெரிவித்தனர். அதே நேரத்தில் மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை காரணமாக, வடமாநில வியாபாரிகள் குடோன்களில் பதுக்கி வைத்திருந்த பருப்புகளையும் விற்பனைக்கு கொண்டு வரத்துவங்கியுள்ளனர்.

இது குறித்து, பருப்பு வியாபாரி சீனிவாசன் கூறியதாவது: சமையலில் முக்கியப்பங்கு வகிக்கும் துவரம் பருப்பின் உற்பத்தி அதிக அளவில் வடமாநிலங்களில் உள்ளதால், அதன் விலையையும் வடமாநில வியாபாரிகளே நிர்ணயம் செய்கின்றனர். தற்போது ஆன் லைன் வர்த்தக முறையால் வியாபாரிகள் எதிர்பார்ப்புக்கு மாறாக பருப்பு விலையில் திடீர் சரிவு, ஏற்றம் ஏற்படுவது வாடிக்கையாகி விட்டது. வடமாநிலங்களில் பருப்பு விளைச்சல் அதிகரித்து அதிக அளவில் விற்பனைக்கு வரும் நிலையில் வியாபாரிகள் பதுக்கி வைத்திருந்த பருப்பும் விற்பனைக்கு வர துவங்கி விட்டது. இந்த வரத்து அதிகரிப்பால், இரண்டு நாளில் மட்டும் குவிண்டாலுக்கு 2,100 ரூபாய் வரை விலை சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த சரிவு, தமிழகத்தில் உள்ள பருப்பு வியாபாரிகளுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு சீனிவாசன் கூறினார். ஒருக்கால், வெளிமார்க்கெட் டில் அதிக அளவு விலைச் சரிவு ஏற்பட்டால், கூட்டுறவு அமைப்பு மூலம் சலுகை விலையில் விற்கப்படும் துவரம்பருப்பு விற்பனை குறையவும் வாய்ப்பு இருக்கிறது. ரேஷனிலும் மேல்தட்டு மக் கள் ஆர்வமாக வந்து வாங்கும் போக்கை குறைத்துக் கொள்ளலாம்.

-நமது சிறப்பு நிருபர்-

**காபி கொட்டை விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பிப்ரவரி 01,2010,03:13



காபி கொட்டை விலை உயர்ந்துள்ளதால், காபி தோட்ட உரிமையாளர்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். உலக அளவில் காபி உற்பத்தியில், இந்தியா ஆறாவது இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் காபியில், பெரும் பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதே சமயம், டிசம்பர் 31ம் தேதியுடன் நிறைவடைந்த முழு ஆண்டில், நாட்டின் காபி ஏற்றுமதி, 2008ம் ஆண்டு மேற்கொள் ளப்பட்ட ஏற்றுமதியை விட, 12 சதவீதம் சரிவடைந்துள்ளது. 2009ம் ஆண்டில், இந்தியா 1.89 லட்சம் டன் காபியை பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இது, 2008ம் ஆண்டில் 2.13 லட்சம் டன்னாக இருந்தது.

இந்தியாவின் ரோபஸ்டா வகை காபிக்கு, பல நாடுகளில் வரவேற்பு அதிகம் உள்ளது. 2008ம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து, 2009ம் ஆண்டின் முற்பகுதி வரை ஏற்பட்டிருந்த பொருளாதார மந்த நிலையால், காபி பயன்பாடு குறைந்தது. சர்வதேச சந்தையில், இந்தியாவின் ரோபஸ்டா வகை காபியின் விலை, டன்னுக்கு 150 முதல் 160 டாலர் என்ற அளவில் இருந்தது. உகாண்டா உள்ளிட்ட மற்ற நாடுகளின் ரோபஸ்டா வகை காபியின் விலையை விட 50 சதவீதம் அதிகம்.

காபி உற்பத்தியாளர்கள் கூறியதாவது: இந்தியாவில் மேற்கொள்ளப்படும், 'இன்ஸ்டன்ட் காபி' ஏற்றுமதியும் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. 2010 ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலாண்டில், 'இன்ஸ்டன்ட் காபி' ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உக்ரைன், ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், நம் நாட்டிலிருந்து அதிகளவில் காபியை இறக்குமதி செய்து கொள்கின்றன. தமிழகத்தில், சேர்வராயன் மலைத் தொடரில் காபி உற்பத்தி கணிசமாக உயர்ந்துள்ளது.

சேலம் ஏற்காடு மலைத்தொடரில், 5,100 எக்டேரில் காபி பயிரிடப்பட்டுள்ளது. இங்கு, அராபிகா வகை காபி அதிக அளவிலும், ரொபஸ்டா வகை காபி மிக குறைவாகவும் பயிராகியுள்ளது. அதிகளவு மழை, கடும் பனிப்பொழிவு ஆகியவை இல்லாததாலும், ஆண்டு முழுவதும் சீரான பருவநிலை இருந்து வருவதாலும், கடந்த பருவத்தை விட, நடப்பு பருவத்தில் காபி உற்பத்தி நல்ல நிலையில் உள்ளது. அறுவடை சீசன் என்பதால், காபி வரத்தும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த வாரம், ஒரு கிலோ 125 ரூபாயாக இருந்த காபி கொட்டை, தற்போது, 140 ரூபாய் வரை விற்பனையாகிறது. 50 கிலோ கொண்ட ஒரு மூட்டை, ஏழாயிரம் ரூபாய் வரை விற்பனையாகிறது. இதனால், காபி தோட்ட உரிமையாளர்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## முக்கிய பொருட்கள் இறக்குமதி அதிகரிப்பு

பிப்ரவரி 01,2010,03:12



புதுடில்லி: கடந்தாண்டு ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலத்தில், முக்கியப் பொருட்களின் இறக்குமதி 34.5 சதவீதம் அதிகரித்துள்ளதாக, வர்த்தகத் துறை அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, வர்த்தகத் துறை அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட தகவல்: கடந்தாண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலத்தில், பால் மற்றும் பால் பொருட்கள் 131.16 கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டன. டீ மற்றும் காபி ஆகிய பொருட்கள் 185.39 கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டன. இவை அனைத்தும், அதற்கு முந்தைய ஆண்டை விட அதிகம். சமையல் எண்ணெய், 14 ஆயிரம் கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டு, 8,195 கோடி ரூபாய்க்கு மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டது.

கச்சா சமையல் எண்ணெய் மற்றும் ரிபைன்ட் எண்ணெயின் இறக்குமதி முறையே 83 சதவீதம் மற்றும் 36 சதவீதம் அதிகரித்துள்ளது. இதைத்தவிர பருப்புகள், ரப்பர், மசாலா பொருட்கள், உணவு தானியங்கள், உட்பட பல பொருட்களின் இறக்குமதியும் அதிகரித்துள்ளன. மதுபானங்கள் மற்றும் ஆட்டோமொபைல் இறக்குமதி சிறிது குறைந்துள்ளது. எனினும், கடந்தாண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான காலத்தில் இறக்குமதி செய்யப் பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு 7.16 லட்சம் கோடி ரூபாய். இது, அதற்கு முந்தைய ஆண்டு மதிப்பான 9.16 லட்சம் கோடி ரூபாயை விட குறைவு. பொருட்களின் மொத்த இறக்குமதி மதிப்பான 5 சதவீதத்தில், முக்கியப் பொருட்களின் இறக்குமதி 2.9 சதவீதம். இவ்வாறு அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதிக மகசூல் தரும் மர ரகங்கள்: ஆராய்ச்சி துரிதம் விவசாயிகள் கருத்தரங்கில் தகவல்**

பொள்ளாச்சி: "குட்டை நெட்டை ரக தென்னை மரங்களை கண்டுபிடித்து வழங்குவதற்கான ஆராய்ச்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன' என விவசாய கருத்தரங்கில் அறிவுறுத்தப்பட்டது."லஷ்மி விலாஸ்' வங்கி மற்றும் ஆழியாறு "தென்னை ஆராய்ச்சி நிலையம்' சார்பில் பொள்ளாச்சியில் தென்னை சாகுபடி கருத்தரங்கம் நடந்தது. வங்கி சீனியர் மேலாளர் சத்தியமூர்த்தி வரவேற்றார்.

பொதுமேலாளர் ரவிசங்கர் தலைமை வகித்தார்.தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜமாணிக்கம் பேசியதாவது: ஆராய்ச்சி நிலையம் சார்பில் கடந்த 2000ல் ஏஎல்ஆர் சிஎன்1 என்ற நெட்டை ரகம் வெளியிடப் பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள நெட்டை ரகங்களை விட 30 முதல் 60 சதவீதம் கூடுதல் மகசூல் தருகிறது. 66 சதவீதம் எண்ணெய் சத்து அதிகம் கொண்டுள்ளது.குறைந்தபட்சமாக 125 முதல் 225 தேங்காய் வரை காய்ப்புத்திறன் உள்ளது. 100 தேங்காய்களை உரித்தால் 15 கிலோ வரை கொப்பரை தருகிறது. ஓரளவு பூச்சி,

நோய் தாக்குதல் மற்றும் வறட்சியை தாங்கிறது. நாமக்கல், தர்மபுரி, சேலம் போன்ற தண்ணீர் பற்றாக்குறை உள்ள இடங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.இன்னும், இரண்டு மாதங்களில் ஏஎல்ஆர் சிஎன்2 என்ற நெட்டை ரகம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. சிஎன்1 விட குறைந்த மகசூல் திறன் உள்ளது. குறைந்தபட்சமாக 110 முதல் 140 தேங்காய்வரை ஆண்டுக்கு காய்ப்புத்திறன் உள்ளது.ஆனால், கூடுதல் வறட்சித்திறன் கொண்டது. தண்ணீர் குறைவாக உள்ள இடத்திலும் செழிப்பாக மரங்கள் வளரும். எதிர்காலத்தில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.எதிர்காலத்தில் குட்டை நெட்டை மற்றும் நெட்டை குட்டை போன்ற ரகங்களை கண்டுபிடித்து வழங்க ஆராய்ச்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. வரும் 2013ல் இளநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், கென்தாலி குட்டை ரக மரம் அறிமுகப்படுத்தப்படும். அதில், 400 மில்லி லிட்டர் இளநீர் இருக்கும்.நீர்வள, நிலவள திட்டம் சார்பில் தென்னையில் துல்லிய பண்ணையம் அமைக்க புதிதாக நடும் தென்னங்கன்றுகளுக்கு, 65 சதவீத மானியத்தில் தண்ணீரில் எளிதாக கரையக்கூடிய உரங்கள் வழங்கப்படுகின்றன. தென்னையில் கோகோ ஊடுபயிர் சாகுபடிக்கு நாற்றுகளும் இலவசமாக வழங்கப்படுகிறது.இவ்வாறு, ராஜமாணிக்கம் பேசினார்.உதவிப்பேராசிரியர்கள் கீதாஞ்சலி (மரபியல்), ராஜ்குமார் (உழவியல்) மற்றும் ஜான்சன் (நோயியல்) ஆகியோர் தொழில்நுட்ப முறைகள் குறித்து பேசினர். நிறைவாக, வங்கி உதவி மேலாளர் கோகிலா நன்றி கூறினார்.

**நிலக்கடலையில் அதிக விளைச்சல் விவசாயிகளுக்கு அறிவுரை**

அன்னூர்: "பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றினால் நிலக்கடலையில் அதிக விளைச்சல் பெறலாம்' என, வேளாண் அறிவியல் நிலைய அதிகாரி தெரிவித்தார்.அவினாசிலிங்கம் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், நிலக்கடலை முதல் நிலை செயல் விளக்க திடலுக்கு ஆம்போதி கிராமம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கும் விழா ஆம்போதியில் நடந்தது. வேளாண் அறிவியல் நிலையத்தின் நாகராஜ் வரவேற்றார்.ஊராட்சி தலைவர் முத்துச்செல்வி முன்னிலை வகித்து பேசுகையில்,""வறட்சி, சூறாவளிகாற்று மற்றும் நோய் தாக்குதலால் வாழை, கரும்பு, மஞ்சள் உள்பட பல பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. பயிர் காப்பீடு குறித்த விதிமுறைகளை எளிமைப்படுத்தி, காப்பீடு கட்டணத்தை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றார்.நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சுகந்தி தலைமை வகித்து பேசியதாவது: கோவை மாவட்டத்தில் 1,500 ஹெக்டேரில் நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. பருவமழை குறைவால் பயிரிடும் பரப்பு குறைந்துள்ளது. நிலக்கடலையில் இரண்டாம் களை எடுக்கும்போது ஜிப்சம் இட்டு, மண் அணைக்க வேண்டும். விவசாயிகள், புதிய ரக விதைகளான டிஎம்வி 13, கோ 2 ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும்.

பயிர் பாதுகாப்பு முறைகளை சரியாக பயன்படுத்தினால் ஏக்கருக்கு 1,200 கிலோ காய்ந்த கடலை விளைச்சல் பெறலாம். தற்போது, கடலைப்பருப்புக்கு கிலோவுக்கு 60 ரூபாய் விலை கிடைக்கிறது. நிலக்கடலையை வாழை தோட்டத்தில் ஊடுபயிராகவும் பயிரிடலாம். நிலக்கடலையில் ஊடுபயிராக உளுந்து, பாசிப்பயறு, தட்டை ஆகியவற்றை பயிரிடலாம். சொட்டு நீர் பாசனம் பயன்படுத்துவதன் மூலம் நீரை மிச்சப்படுத்தலாம்.இவ்வாறு சுகந்தி பேசினார்.அறிவியல் நிலையத்தின் ராஜு செயல் விளக்கம் செய்து காண்பித்தார். முன்னோடி விவசாயிகள் ரவிக்குமார், யூகமூர்த்தி, ஊராட்சி துணை தலைவர் கணேசமூர்த்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

**கண்மாய்கள் தூர்வாரப்படாததால் விவசாயம் பாதிப்பு : வேலை உறுதி திட்ட பணிக்கு மக்கள் ஆர்வம்**

திண்டுக்கல் : திண்டுக்கல் அருகே எரியோட்டில் 20 கண்மாய்கள் 30 ஆண்டுகளுக்கும் மேல் தூர்வாரப்படாததால் விவசாயம் அடியோடு பாதிக்கப் பட்டுள் ளது. இங்கு கிராம வேலை உறுதி திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என பொதுமக்கள் விரும்புகின்றனர்.

திண்டுக்கல் அருகே உள்ள எரியோடு பேரூராட்சியில் 20க்கும் மேற் பட்ட கிராமங்கள் உள்ளன.15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர்.20 கண்மாய்கள் உள் ளன. இவை 30 ஆண்டுகளுக்கும் மேலாக தூர்வாரப்படவில்லை.இதனால் மண் மேவி காணப்படுகின் றன.வறண்ட பகுதியான இங்கு கண் மாய் நீரை தவிர வேறு எந்த பாசன வசதிகளும் கிடையாது. இக்கிராமத்தில் வெங்காயம்,கடலை, தக்காளி, நெல் சாகுபடி நடந்து

வந்தது.
தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயம் அடியோடு வீழ்ச்சியடைந்து ஆயிரத்து 700 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் தரிசு நிலங்களாகி விட்டன. மேய்ச்சல் நிலங்கள் இல்லாததாலும், வறட்சி காரணமாக தண்ணீர் இல்லாததாலும் விவசாயத்தின் முக்கிய துணை தொழிலான கால்நடை வளர்ப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. கிராமத்தில் இருந்து 20 கி.மீ.,தொலைவில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு இங்குள்ள மக்கள் தினமும் பஸ்சில் சென்று விட்டு வீடு திரும்புகின்றனர்.
இப்பேரூராட்சியில் வேலை உறுதி திட்டம் செயல்படுத்தப்படவில்லை.இங்கு இந்த திட்டத்தை செயல்படுத்தினால் பல ஆயிரம் பேர் வேலை செய்ய முன்வருவர்.இதன் மூலம் இக்கண் மாய்களையும், நீர் வரத்து வாய்க் கால்களையும் தூர்வாற முடியும்.
பேரூராட்சி தலைவர் மஞ்சுளா ஜீவா கூறியதாவது: பேரூராட்சி சார்பில் இரண்டு கண்மாய்களை மட்டும் தூரெடுத்துள்ளோம்.மீதமுள்ள கண்மாய்களை தூர்வார பேரூராட்சியில் நிதி வசதி இல்லை. கண்மாய் தூர்வார நிதி ஒதுக்குமாறு மாவட்ட நிர்வாகத்தையும், அரசையும் கேட்டுள்ளோம். நிதி வந்ததும் இந்த பணிகள் தொடங்கும். அரசு பேரூராட்சி பகுதியிலும் வேலை உறுதி திட்டத்தை விரிவுபடுத்துவதாக அறிவித்து இருந் தது. இங்கு இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் அதிக வேலைகள் செய்ய முடியும். மக்களுக்கும் வேலை கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**சேனை கிழங்கு உற்பத்தி அதிகரிப்பு டன்னுக்கு ரூ.3 ஆயிரம் குறைந்தது**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டார பகுதியில் சேனை கிழங்கு உற்பத்தி நடப்பாண்டு அதிகரித்துள்ளது. மேலும், சேனை கிழங்கு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது.

கோபி அரக்கன் கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் 1,000 ஏக்கரில் ஆண்டுதோறும் சேனை கிழங்கு பயிரிடப்பட்டு வருகிறது. நடப்பாண்டு மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்து வருவதால், ஊடுபயிராக சேனை கிழங்கை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டுள்ளனர். கோபி, அத்தாணி, கள்ளிப்பட்டி, பங்களாபுதூர், கெட்டிசேவியூர், சிறுவலூர், செட்டியம்பாளையம், டி.என்.பாளையம், கொளப்பலூர், குருமந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சேனை கிழங்கு புரட்டாசி மாதம் முதல் பயிரிடப்பட்டது. தற்போது கோபி பகுதிகளில் சேனை கிழங்கு அறுவடை தொடங்கியுள்ளது. கோபி பகுதியில் விளையும் சேனை கிழங்குக்கு அரபு நாடுகளில் கிராக்கி உண்டு.

கோபியில் இருந்து கோவை, திருப்பூர், சேலம் உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு தினமும் 20 முதல் 30 டன் வரை சேனை கிழங்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட சேனை கிழங்கு அரபு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வரும் வைகாசி மாதம் வரை சேனை கிழங்கு அறுவடை இருக்கும். நடப்பாண்டு சேனை கிழங்கு உற்பத்தி அதிகரிப்பால் விலை குறைந்துள்ளது. கடந்தாண்டு சேனை கிழங்குக்கு டன் ஒன்றுக்கு 13 ஆயிரம் ரூபாய் வரை விற்றது. தற்போது உற்பத்தி பெருக்கத்தால் சேனை கிழங்கு டன்னுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரைதான் கிடைக்கிறது. சேனை கிழங்கு அறுவடை இறுதி கட்டத்தை எட்டும் வைகாசி மாத இறுதியில் விலை அதிகரிக்கும் என சேனை கிழங்கு பயிரிட்டுள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.

**இயந்திரம் மூலம் நெல் அறுவடை துவக்கம் சோகத்தில் கூடை வியாபாரிகள்**

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளில் நெல் அறுவடை இயந்திரம் மூலம் செய்யப்படுவதால், கூடை மற்றும் முறங்களுக்கு தேவை குறைந்துள்ளது. கோபி பகுதியை சேர்ந்த கூடை வியாபாரிகள் சோகத்தில் உள்ளனர். ஆண்டுதோறும் கோபி பகுதியில் இரண்டு முறை நெல் உள்ளிட்ட விவசாய பொருட்கள் சாகுபடி செய்யப்படுகிறது. அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் 30 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. நெல் அறுவடை செய்ய கோபி பகுதியில் போதிய விவசாய கூலி ஆட்கள் கிடைப்பது இல்லை. சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், மதுரை உள்ளிட்ட தென்

மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாய தொழிலாளர்கள் கோபியில் முகாமிட்ட போதிலும், ஆட்கள் பற்றாக்குறையாகவே உள்ளது.

நெல் முற்றிய நிலையில் விவசாய கூலி ஆட்களை எதிர்பார்க்காமல், விவசாயிகள் அறுவடை இயந்திரங்களை பயன்படுத்தி நெல் அறுவடையை துவக்கி உள்ளனர். விவசாய கூலி ஆட்கள் மூலம் நெல் அறுவடை மேற்கொண்டால், கூடை மற்றும் முறங்களுக்கு அதிக தேவை ஏற்படும். இதனால் கோபி, வாணிப்புத்தூர், சிறுவலூர், குருமந்தூர், நம்பியூர் உள்ளிட்ட பகுதியில் மூங்கிலான கூடை மற்றும் முறங்களை தொழிலாளர்கள் உற்பத்தி செய்வது வழக்கம். சிறிய அளவிலான கூடைகள் 30 ரூபாய்க்கும், பெரிய அளவிலான கூடைகள் 80 முதல் 100 ரூபாய் வரையிலும், பதறுகளை தூற்ற பயன்படுத்தப்படும் முறங்கள் ஜோடி 40 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. இரண்டாம் போக சாகுபடியை கருத்தில் கொண்டு ஏராளமான மூங்கில் கூடை மற்றும் முறங்களை தொழிலாளர்கள் உற்பத்தி செய்து விற்பனைக்காக வைத்துள்ளனர். ஆனால், கோபி பகுதியில் இயந்திரம் மூலம் நெல் அறுவடை நடந்து வருவதால் கூடை மற்றும் முறங்களின் விற்பனை கடுமையாக பாதித்துள்ளது. இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் போது சாக்கு பைகளில் நெல்லை நேரடியாக விவசாயிகள் பிடித்து மூட்டைகளாக கட்டி கொள்கின்றனர். இதனால் மூங்கில் கூடை மற்றும் முறங்கள் எதிர்பார்த்த அளவில் விற்பனையாகாமல் தேங்கிய நிலையில் உள்ளது.

**தமிழகத்தில் முதல் மலரியல் ஆராய்ச்சி நிலையம் திறப்பு விழா : அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் திறந்து வைத்தார்**

நாகர்கோவில் : தமிழகத்தில் முதல் மலரியல் ஆராய்ச்சி நிலையம் திறப்பு விழா தோவாளை அருகேயுள்ள விசுவாசபுரம் மலர் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடந்தது. தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் ஆராய்ச்சி நிலைய கட்டடத்தை திறந்து வைத்தார்.
தமிழகத்தில் வேளாண்மை துறையின் கீழ் 34 ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. 35வது ஆராய்ச்சி நிலையமாக தமிழகத்தில் முதல் மலர் ஆராய்ச்சி நிலையம் விசுவாசபுரத்தில் தற்போது துவங்கப்பட்டுள்ளது. மேலும் வேளாண்மை துறையின் கீழ் 10 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. 746 புதிய பயிர் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 146 பண்ணை கருவிகள் உள்ளன. மேலும் ஏராளமான புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு கற்றுகொடுக்கப்பட்டு வருகிறது.
கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பதிசாரம் நெல் ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், வேளாண்மை அறிவியல் நிலையம் என மூன்று ஆராய்ச்சி நிலையங்கள் இதுவரை செயல்பட்டு வந்தன. தற்போது நான்காவதாக மலர் ஆராய்ச்சி நிலையம் துவங்கப்பட்டுள்ளது.
அதிக அளவில் மலர் உற்பத்தி மற்றும் விற்பனை நடக்கும் தோவாளையில் மலர் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தமிழக அரசு விசுவாசபுரத்தில் புதிய மலர் ஆராய்ச்சி நிலையத்தை துவங்கியுள்ளது.
புதிய மலர் ஆராய்ச்சி நிலைய கட்டடம் திறப்பு விழா மற்றும் மலரியல் ஆய்வகம் அடிக்கல் நாட்டு விழா ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடந்தது. விழாவிற்கு கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை.,க துணைவேந்தர் பேராசிரியர் முருகேச பூபதி தலைமை வகித்தார். மாவட்ட கலெக்டர் ராஜேந்திர ரத்னு, சென்னை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் டாக்டர் சந்திரமோகன் முன்னிலை வகித்தனர். தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் முனைவர் குமார் வரவேற்றார்.
தமிழக வேளாண்மை துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் ஆராய்ச்சி நிலைய கட்டடத்தை திறந்து வைத்து, புதிய ஆய்வக கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டி பேசினார். விழாவில் அமைச்சர் சுரேஷ்ராஜன், ஹெலன்டேவிட்சன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ஜெயபால், ஜாண்ஜோசப், மாவட்ட பஞ்., சேர்மன் அஜிதா மனோதங்கராஜ், மாவட்ட வேளாண் விற்பனை குழு தலைவர் ஷா, தமிழ்நாடு மீனவர் நலவாரிய துணை தலைவர் பெர்னார்டு, மாவட்ட வேளாண்மை பொறியியல் செயற்பொறியாளர் சாம்செல்வராஜ், வேளாண்மை இணை இயக்குனர் விஜயகுமார், கோயம்புத்தூர் மலரியியல் துறை பேராசியர் ஜவஹர்லால், பேச்சிப்பாறை வேளாண்மை அறிவியல் மைய தலைவர் முனைவர் இறைவன், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர்

பிரேம்ஜோஷ்வா, திருப்பதிசாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் கிருபாகரன் சவுந்தர்ராஜன், முனைவர் பரமாத்மா, யூனியன் கவுன்சிலர் தர்மராஜன், தோவாளை பஞ்., யூனியன் தலைவர் கோலம்மாள், சகாயநகர் பஞ்., தலைவர் தாயம்மாள் ராம்மோகன், மாவட்ட பஞ்., கவுன்சிலர் நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.
விழாவில் மாவட்ட சமூகநலத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, வேளாண்மை துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர், மருத்துவத்துறை, பிறப்பு இறப்பு பதிவாளர் துறை, தோட்டக்கலைத்துறை ஆகிய துறைகள் சார்பில் 530 பயனாளிகளுக்கு 71.61 லட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகள் மற்றும் மகளிர் திட்டம் மூலம் 51 சுய உதவி குழுக்களுக்கு 1.31 கோடி ரூபாய்க்கான நேரடி கடன் என மொத்தம் 2 கோடியே 2 லட்சத்து 61 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சுரேஷ்ராஜன் வழங்கினார்.
ராஜன் எம்.எல்.ஏ., தி.மு.க. நகர செயலாளர் வக்கீல் மகேஷ், கேட்சன், வக்கீல் அசோகன், தாமரைபாரதி, யூனியன் கவுன்சிலர் பூதலிங்கம், அந்தோணிமுத்து, லதா மற்றும் அதிகாரிகள், அரசு ஊழியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். தோவாளை மலரியல் ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் சுவர்ணப்ரியா நன்றி கூறினார்.

**மாவட்ட கலெக்டரின் கோரிக்கைகள் :** மலர் ஆராய்ச்சி நிலைய கட்டடம் திறப்பு விழாவில் மாவட்ட கலெக்டர் ராஜேந்திர ரத்னு பேசும்போது தமிழக வேளாண்மை துறை அமைச்சரிடம் மாவட்ட மக்கள் நலன்கருதி சில கோரிக்கைகளை முன்வைத்தார். குமரி மாவட்டத்தில் நெல் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. விளையும் நெல்லை அரசால் முழுமையாக வாங்க முடியவில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இந்த பிரச்னையை சமாளிக்க நுகர்பொருள் வாணிப கழகம் மற்றும் கூட்டுறவுத்துறையை இணைக்கும் வகையில் புதிய அரசாணை பிறப்பிக்க வேண்டும்.
குமரி மாவட்டம் மலைகள் நிறைந்த பகுதி என்பதால் வனங்களில் உள்ள மிருகங்கள் விளைநிலங்களில் புகுந்து பெரும் சோதத்தை ஏற்படுத்துகிறது. விளைபொருட்களை பாதுகாக்க வனஎல்லைகளில் சூரிய ஒளி மின்வேலி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல்விளைநிலங்கள் வீடுகளாகவும், கல்வி நிறுவனங்களாகவும் மாறி வருகின்றன. இதே நிலை நீடித்தால் நெல் உற்பத்தி இல்லாத நிலை ஏற்படும். எனவே வயல்களை பிளாட் போட்டு விற்பதற்கு தடை சட்டம் வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்தார்.

**நஞ்சை நிலங்கள் பாதுகாப்பிற்கு புதிய சட்டம் : வேளாண்துறை அமைச்சர் உறுதி**

நாகர்கோவில் : கன்னியாகுமரி மாவட்டத்தில் நஞ்சை நிலங்கள் பாதுகாப்பிற்கு புதிய சட்டம் கொண்டு வரப்படும் என தமிழக வேளாண்மை துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கூறினார்.
தோவாளை விசுவாசபுரத்தில் நடந்த முதல் மலரியல் ஆராய்ச்சி நிலைய கட்டடம் திறப்பு விழாவில் வேளாண்மை துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசும்போது கூறியதாவது: தமிழக முதல்வர் கருணாநிதி 5வது முறையாக முதல்வராக பொறுப்பேற்ற பிறகு குமரி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் புதியதாக துவங்கப்பட்டுள்ளன. அரசு இன்ஜி., கல்லூரி, புதிய ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவ கல்லூரி திறப்பு, கூட்டுறவு பயிற்சி கல்லூரி என பல திட்டங்கள் உள்ளன. புத்தேரி மேம்பாலம் 27.40 கோடி, மணக்குடி பாலம் 20 கோடி, தோவாளை சானல் புனரமைப்பு 22.50 கோடி உள்ளிட்ட பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன. எனக்கு முன் பேசியவர்கள் கேட்டுக்கொண்டபடி அனைத்து கோரிக்கைகளையும் முதல்வரிடம் தெரிவித்து அவற்றை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்வேன் என உறுதி கூறுகிறேன்.
தமிழ்நாட்டில் 21.50 லட்சம் எக்டேரில் அரிசி உற்பத்தி நடந்து வருகிறது. 2009-2010ம் ஆண்டு 81.70 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி நடந்துள்ளது. நெல் உற்பத்தி திறனில் இந்தியாவில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது. இந்த ஆண்டு மொத்த உற்பத்தி 110.5 லட்சம் மெட்ரிக் டன் என இலக்கு நிர்ணயித்துள்ளோம். இந்த சாதனையை அடைவோம் என உறுதியாக உள்ளோம்.
கடந்த 2005-2006ம் ஆண்டு நெல் உற்பத்தி 52.10 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. அந்த காலகட்டத்தில் உற்பத்தி திறன் மிக குறைவாக இருந்தது. இந்த நிலையில் இருந்து தமிழகத்தை முன்னேற்றுவதற்காக தரமான

விதை நெல், போதுமான அளவு உரம் வழங்கி உணவு உற்பத்தியில் முன்னேறியுள்ளோம்.
கன்னியாகுமரி மாவட்டத்தில் 19 ஆயிரத்து 899 எக்டேர் தான் நெல் விவசாய நிலம் உள்ளது. ஆனால் கடந்த ஆண்டு 17 ஆயிரத்து 434 எக்டேரில் தான் பயிர் செய்யப்பட்டுள்ளது. சுமார் 3 ஆயிரம் எக்டேர் நிலத்தில் நெல் பயிரிடப்படவில்லை. இங்கு மரவள்ளிக்கிழங்கு 7800 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. பயிர் வகைகள் 1852 எக்டேர் இலக்கு குறித்து 520 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. ரப்பர் 19 ஆயிரத்து 400 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. தென்னை 24 ஆயிரத்து 720 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது.
விவசாயிகளிடன் புதிய தொழில்நுட்பத்தை கொண்டு செல்லும்போது 3 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையை யோசித்து பார்த்து, புதிய நுட்பங்களால் ஈர்க்கப்பட்டுள்ளனர். குமரி மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடியில் 10 ஆயிரத்து 800 எக்டேரில் இலக்கு நிர்ணயித்து 9 ஆயிரத்து 618 எக்டேரில் பயிரிட்ட விவசாயிகளை பாராட்டுகிறேன். செம்மை நெல் சாகுபடி மூலம் அதிக மகசூல் கிடைத்துள்ளது.
சாதாரண நிலத்தில் 6.5 மெட்ரிக் டன் கிடைத்த நெல் பயிர், செம்மை நெல் சாகுபடி மூலம் 11.5 மெட்ரிக் டன் மகசூழ் கிடைத்துள்ளது. குறைந்த விதைகள், குறைந்த தண்ணீர், குறைந்த களை பறிக்கும் பணியாளர்கள் என மிக குறைந்த செலவில் சாதாரண பயிரைவிட 3.7 மெட்ரிக் டன் அதிக மகசூல் பெற்றுள்ளனர். செம்மை நெல் சாகுபடிக்கு சமதள நிலம் அமைப்பதற்கு லேசர் கருவிகள் பயன்படும் என்பதால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்கு லேசர் கருவிகள் தருவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.
கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல், தென்னை, வாழை, ரப்பர் மற்றும் ஏராளமான பழ வகைகள் உள்ளன. மாவட்டத்தில் மொத்தம் 43 ஆயிரத்து 467 ஏக்டேர் நிலத்தில் 4 லட்சத்து 76 ஆயிரத்து 843.16 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி நடந்து வருவது பெருமை அளிக்கிறது. தமிழ்நாட்டில் சராசரியாக 932 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. ஆனால் குமரி மாவட்டத்தில் 1443 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இங்கு 70 நாட்கள் மழை பெய்கிறது. இங்கு அதிகபட்சமாக 32 டிகிரி செல்சியஸ் வெப்பமும், குறைந்தபட்சமாக 23 டிகிரி செல்சியஸ் வெப்பமும் பதிவாகியுள்ளது. காற்றில் 60 முதல் 80 சதவீதம் ஈரப்பதம் இருக்கிறது. இதனால் உணவு உற்பத்தியில் அதிக மகசூல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கிடைக்கிறது. தோவாளை பகுதியில் 225 எக்டேரில் மலர் பயிரிடப்பட்டுள்ளது.
மத்திய, மாநில அரசுகளின் நிதியில் துல்லிய பண்ணையம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வீரிய ஒட்டு ரகங்கள் தரமான நிலையில் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. சாதாரண வாழை 50 மெட்ரிக் டன் உற்பத்தி செய்தால், துல்லிய பண்ணையம் மூலம் 120 மெட்ரிக் டன் உற்பத்தி கிடைக்கிறது. மிளகாய் 1 எக்டேரில் 10 மெட்ரிக் டன் கிடைத்தால் துல்லிய பண்ணையம் மூலம் 30 மெட்ரிக் டன் விளைகிறது. 100 மெட்ரிக் டன் கிடைத்த கரும்பு 790 மெட்ரிக் டன் விளைகிறது. மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு செயல்படுத்தி வரும் இத்திட்டங்களை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
கடந்த 1924ம் ஆண்டு தமிழ்நாடு கேரள அரசுகள் ஒப்பந்தத்தின்படி நெய்யாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கடந்த ஆட்சியில் ஒப்பந்தம் புதுப்பித்தல் தடைபட்டதால் கேரள அரசு தண்ணீர் வழங்குவதை நிறுத்தியது. இதனால் குமரி மாவட்டத்தில் 2360 எக்டேர் நிலம் பாசனம் தடைபட்டது. இந்த விவசாயிகளின் நலன்கருதி இடதுகரை சானலில் தண்ணீர் திறந்து விட கேட்டு நமது பொதுப்பணித்துறை அமைச்சர் கேரள அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.
மொழி அடிப்படையில் தனித்தனியாக இருக்கும் திராவிடர்களிடையே பிரிவினை வேண்டாம் என்ற நல்ல எண்ணத்தில் தமிழக முதல்வர் அமைதியான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். கேரள அரசை நான் கேட்டுக்கொள்வது கடலில் வீணாகும் தண்ணீரை குமரி மாவட்டத்திற்கு வழங்கவேண்டும் என்பதுதான்.
கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு அலுவலகம் கட்டுவதற்கே நிலம் இல்லை என்ற சூழ்நிலையில் பக்கத்து மாநிலத்தை சேர்ந்தவர்கள் இங்கு வந்து ரோட்டோரத்தில் இருக்கும் நிலத்தை வாங்கி விடுகின்றனர். அந்த நிலத்திற்கு பின்னால் இருக்கும் விவசாயிகள் வழிபாதை இல்லாமல் அந்த நபரிடமே குறைந்த விலைக்கு விவசாய நிலங்களை கொடுத்து செல்கின்றனர். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதோடு, விளை நிலங்களும் இல்லாமல் போகிறது என எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ஆதங்கத்துடன் பேசினர்.
கேரளம் மாநிலத்தில் விளைநிலங்களை பிளாட் போட்டு விற்பதற்கு தடை சட்டம் உள்ளதாக மாவட்ட கலெக்டர் கூறினார். கேரளம் மாநிலத்தில் இருப்பது போல் தமிழக அரசும் குமரி மாவட்ட விவசாயிகளின் நலனுக்காகவும்,

விளைநிலங்களின் பாதுகாப்பிற்காகவும் நஞ்சை நிலங்களை பிளாட் போட்டு விற்பதற்கு தடை சட்டம் கொண்டு வரும். இவ்வாறு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசினார்.

**உழவர் சந்தையில் குளிர்சாதன கிட்டங்கி வசதி : வேளாண் அமைச்சர் பேட்டி**

கன்னியாகுமரி : தமிழ்நாட்டில் 20 உழவர் சந்தைகளில் 1 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பில் குளிர்சாதனகிட்டங்கி வசதி செய்யப்பட்டுள்ளது என்று தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கூறினார்.

தோவாளை மலரியல் ஆராய்ச்சி நிலைய திறப்புவிழா நேற்று நடந்தது. விழாவில் கலந்து கொள்வதற்காக கன்னியாகுமரி வந்த அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-தமிழ்நாட்டில் 103 உழவர் சந்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த ஆண்டு 50 உழவர்சந்தை கட்டிமுடிக்க திட்டமிட்டு 49 உழவர்சந்தை கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் தலா 25 லடசம் ரூபாய்.

கடந்த 2007-ம் ஆண்டு முதல் செயல்படாத நிலையில் கண்டறியப்பட்டுள்ள உழவர்சந்தைகளை செயல்படுத்த அரசு திட்ட மிட்டுள்ளது. நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப இடங்களை தேர்வு செய்து உழவர்சந்தை அமைக்கப்படும். உழவர்சந்தைகளுக்கு வரும் காய்கறிகள் கெட்டுபோகாமல் இருக்கும் வகையில் முதல்கட்டமாக 20 உழவர்சந்தைகளில் 1 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பில் குளிர்சாதனகிட்டங்கி வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 5 இடங்களில் குளிர்சாதன கிட்டங்கி வசதி செய்யப்பட உள்ளது. இவற்றில் இரண்டு முதல் நான்கு டன் வரை காய்கறிகள் வைக்கமுடியும். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

பேட்டியின் போது அமைச்சர் சுரேஷ்ராஜன் உடனிருந்தார். முன்னதாக கன்னியாகுமரிக்கு வந்த அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தை அவை தலைவர் ஜோசப்ராஜ், ஒன்றிய செயலாளர் தாமரைபாரதி, நகர செயலாளர் ஜெஸ்டின் மற்றும் பலர் வரவேற்றனர்.

**விதை கிராமங்கள் தத்தெடுப்பு**

திருப்பரங்குன்றம் : திருப்பரங்குன்றம் பகுதியில் உள்ள 7 கிராமங்கள் நெல், பயறு விதைகளுக்காக தத்தெடுக்கப் பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வன் அறிக்கை: திருப்பரங்குன்றம் வட்டாரத்திலுள்ள விவசாயிகள் தரமான விதைகளை உற்பத்தி செய்து, மற்ற விவசாயிகளிடம் மாற்றி கொள்வதற்காக விதை கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளன. கரடிப்பட்டி, காமாட்சிபுரம், சின்ன உடைப்பு கிராமங்களில் நெல் விதைக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்குள்ள 150 விவசாயிகளுக்கு நெல் வழங்கப்பட்டுள்ளது. மழை குறைந்து விட்டதால் பயறு விவசாயத்தை ஊக்கப்படுத்தும் வகையில், பனையூர், கருவேலம் பட்டியை தேர்வு செய்து, 15 ஏக்கரில் பயறுகள் விதைக்கப்பட்டுள்ளன. நல்லூரில் 8 ஏக்கரில் கடலையும், தென்பழஞ்சியில் 10 ஏக்கரில் கம்பும் விதைக்கப்பட்டுள்ளது. தத்தெடுத்த கிராம விவசாயிகளுக்கு, 50 சதவித மானியத்தில் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு விதைப்பு நேரத்திலும், தற்போது தரமான, அதிக விளைச்சலை பெறுவதற்கான பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அறுவடை பருவத்தில் மூன்றாம் கட்ட பயிற்சிகள் தரப்படும் என்றார். திருப்பரங்குன்றம் வட்டார வேளாண்மை அலுவலர் உலகம்மாள், துணை அலுவலர் கோவிந்தராஜன், உதவி விதை அலுவலர்கள் வெற்றி செல்வன், பாரதி, உதவி ளோண் அலுவலர்கள் பாண்டி, சாலினி, பாஸ்கர பாண்டியன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**சிறுதானிய உணவுகள் தினமும் அவசியம் : உணவு கண்காட்சியில் தகவல்**

மதுரை : சர்க்கரை நோய் மற்றும் உடல் பருமனை குறைப்பதற்கான உணவு கண் காட்சி, மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் நேற்று நடந்தது.

மேலாளர் பாண்டியராஜன் வரவேற்றார். சர்க்கரை நோய் சிகிச்சை டாக்டர் ரவிக்குமார் கூறியதாவது :சர்க்கரை நோய்க்கு முக்கிய காரணியாக உணவு உள்ளது. உணவுக் கட்டுப் பாடு மூலம் 58 சதவீதம் நோய் வராமல்

தடுக்கலாம். மருந்துகள் மூலம் 36 சதவீதம் நோயை கட்டுக்குள் வைக்கலாம். உடல் பருமன் உள்ளவர்களுக்கு சர்க்கரை, இதய நோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். உடற்பயிற்சி செய்வது அவசியம் என்றார்.
விவசாயக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் அழகிய நாகலிங்கம் கூறியதாவது:அரிசி, கோதுமை போன்ற உணவுகளுக்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கம்பு, ராகி, கேழ்வரகு, குதிராவாளி போன்ற சிறு தானியங்களுக்கு முக்கியத் துவம் இல்லை. மனிதனுக்கு தினமும் 25 கிராம் நார்ச்சத்துள்ள உணவுப்பொருட்கள் தேவை. அது, மேற்கூறிய சிறு தானியங்களில் கிடைக்கிறது. இப்போது நாம் உண்ணும் உணவில், 5 கிராம் மட்டுமே நார்ச்சத்து உள்ளது. தினமும் உணவில் சிறுதானியங் களை கண்டிப்பாக சேர்க்க வேண்டும் என்றார். பல்வேறு மாவட்டங் களை சேர்ந்த, 21 கல்லூரிகள் பங்கேற்ற, இக் கண்காட்சியில் 200 விதமான உணவுகள் தயாரிக்கப்பட்டன. வெற்றி பெற்றவர்களுக்கு இசை அமைப்பாளர் ஜேம்ஸ்வசந்தன் பரிசு வழங்கினார். டாக்டர்கிருஷ்ணம்மாள் நன்றி கூறினார். ஏற்பாடுகளை மார்க்கெட்டிங் இயக்குனர் ஆன்ட்ரூஸ், மேலாளர் சிவராம கிருஷ்ணன், துணை மேலாளர் கமலக்கண்ணன் செய்திருந்தனர்.

**பெருங்காய இறக்குமதிக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் : வியாபாரிகள் சங்கம் கோரிக்கை**

மதுரை : தமிழ்நாடு உணவுப்பொருள் வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜெயப்பிரகாசம் வெளியிட்ட அறிக்கை :எங்களது சங்கத்தில் கூட்டுப் பெருங்காய தயாரிப்பாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 100 கிராம் கூட்டுப் பெருங்காயத்தில் 60 கிராம் கோதுமை, 30 கிராம் சாப்பிடக்கூடிய "கிராம் அராபிக்', 10 சதவீதம் பெருங்காயப் பசை சேர்ந்துள்ளது. இந்தியாவில் பெருங் காயப் பசை தயாரிக்கும் தாவரம் இல்லை. எனவே வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்கிறோம். இதற்கு 36.3 சதவீத இறக்குமதிவரி விதிக்கப்படுகிறது.
ஆயுர்வேத தயாரிப்புக்கும், உணவு தயாரிப்புக்கும் இறக்குமதி செய்யப்படுகின்ற பெருங்காயத்தின் அளவு குறைவு. வாயுத் தொல்லையை போக்கி, அஜீரணத்தை சரிசெய்யும் பெருங்காயம் ஆடம்பர உணவுப் பொருள் கிடையாது. எனவே இறக்குமதி செய்யப்படும் பெருங் காயத்திற்கான வரியை விலக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை, மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மாவுக்கு, மனுவாக சமர்ப்பித்துள்ளோம், என்றார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

திருத்துறைப்பூண்டி:திருத்துறைப்பூண்டி அருகே நெடும்பலம் அரசு விதைப்பண்ணையில் விவசாயிகளுக்கு விதை சேகரிப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் எம்பெருமாள் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் தெய்வேந்திரன் விதை சான்றளிப்பு துறை, விதை தேர்வு செய்வது குறித்தும் விளக்கம் அளித்தார். விதை பண்ணை மேலாளர் முத்தையா விதை சுத்திகரிப்பு இயந்திரத்தை இயக்கி விதை சுத்திகரிப்பு முறை குறித்து விளக்கம் அளித்தார். விவசாயிகளுக்கு சம்பா பருவத்தில் நாற்று விடுவதில் இருந்து அறுவடை செய்து அடுத்த பருவத்திற்கு விதை சேகரித்து வைப்பது வரையிலும், விதை முதல் விதை வரை மூன்று கட்டங்களாக பயிற்சி அளிக்கப்பட்டது.ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் தவமணி, உதவி அலுவலர்கள் சாமிநாதன், சிவகுமார், மகேஷ், செந்தில் ஆகியோர் செய்திருந்தனர்.

**மக்கள் நலனுக்காக புதிய கண்டுபிடிப்புகள் மத்திய இணை அமைச்சர் வலியுறுத்தல்**

நாமக்கல்: "புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்குவது நாட்டுக்காகவும், மக்கள் நலனுக்காகவும் இருக்க வேண்டும்' என, மத்திய இணை அமைச்சர் காந்திச்செல்வன் பேசினார். நாமக்கல் அடுத்த குமாரபாளையம் எக்ஸல் கல்வி நிறுவனத்தில் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்கழக மாநாடு, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் விவசாயம், விமான கண்காட்சி துவக்க விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்லூரி தலைவர் நடேசன் தலைமை வகித்தார். முதல்வர் பொம்மண்ணராஜூ வரவேற்றார். கோவை தமிழ்நாடு விவசாய பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி, குமாரபாளையம் நகராட்சி சேர்மன் சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் காந்திச்செல்வன், கண்காட்சியை துவக்கி வைத்து பேசியதாவது:

இந்தியாவின் அறிவியல், பொருளாதாரம், மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை கண்டு உலக நாடுகள் பொறாமைப்படும் நிலையில் உள்ளன. மக்கள் தொகை ஒரு சுமையாக இருந்தாலும் ஒவ்வொரு துறையிலும் போட்டி போட்டு வளர்ச்சி அடைந்து வருகிறது.
கடந்த 30 ஆண்டுகளில் கல்வி மாபெரும் வளர்ச்சியை பெற்றுள்ளது. மருத்துவம், இன்ஜினியரிங் உள்ளிட்ட உயர் கல்வி பெற நகரங்களை நாடிச்செல்லும் நிலை தற்போது மாறியுள்ளது. தமிழகத்தில் அதிக இன்ஜினியரிங் கல்லூரிகள் உள்ள மாவட்டமாக நாமக்கல் உள்ளது.
புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்குவது நாட்டுக்காகவும், மக்கள் நலனுக்காகவும் இருக்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் போட்டி மனப்பான்மை, கல்வி, ஆற்றல், வளர்ச்சி பெறும் வகையில் இருக்க வேண்டும். மாணவ சமுதாயம் எந்த செயலையும் நம்பிக்கையுடனும், ஈடுபாட்டுடனும் செய்ய வேண்டும்.
பல்வேறு நிலையில் வளர்ச்சியுள்ள நாம், தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியால் வீட்டில் அமர்ந்து கொண்டே கல்வி பெறும் நிலை உள்ளது. மத்திய அரசு உயர்கல்வியில் வளர்ச்சி பெற 12 ஐ.ஐ.டி., 12 என்.ஐ.டி., துவக்க 2,113 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த கல்வி ஆண்டில் அயல்நாடுகளில் இருந்து இந்தியாவில் வந்து கல்வி கற்போர் எண்ணிக்கை 4,250 பேர்.வரும் கல்வி ஆண்டில் மேலும், 30 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தரமான கல்வியை அளிக்க மத்திய பல்கலைக்கு 823 கோடி ரூபாய் மத்திய அரசு வழங்கியுள்ளது. அனைத்து தரப்பினரும் உயர் கல்விபெற வங்கியில் வட்டியில்லாக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஏழை, எளியோரும் உயர்கல்வி பெற தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் திறமை உண்டு. அதை முடியும் என்ற எண்ணத்தோடு சமுதாயம் பயன்பெற உதவவேண்டும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் கல்வி நிறுவன துணைத்தலைவர் மதன் கார்த்திக் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பயிர் சாகுபடி... மேட்டூர் நீர் மட்டம் சரிவால் துவக்கம்: வெளியில் தெரியும் கோட்டை அரண்கள்**

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்மட்டம் குறைந்ததால் மன்னர்கள் கட்டிய கோட்டை அரண்கள், மூழ்கிய கிராமங்கள் வெளியில் தெரிகிறது. எஞ்சியுள்ள அரண்கள், அழிந்த கிராமங்களை விவசாய நிலமாக மாற்றி கரையோர மக்கள் பயிர் சாகுபடியை துவங்கியுள்ளனர். மேட்டூர் அணை 151 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது. அணை கட்டுவதற்கு முன், அந்த நிலப்பரப்பில் மன்னர்கள் கட்டிய கோட்டைகள், பாதுகாப்பு அரண்கள், ஏராளமான குடியிருப்புகள் இருந்தன. மன்னர் ஆட்சி முடிந்த பின் கோட்டைகளும், கற்களை அடுக்கி கட்டப்பட்ட பாதுகாப்பு அரண்களும் சிதிலமடைந்து விட்டது. ஆங்காங்கே கிராமங்களில் பொதுமக்கள் குடியிருப்பு கட்டி விவசாய தொழிலில் ஈடுபட்டனர். கடந்த 1925 ஜூலை20ல் மேட்டூர் அணை கட்டுமான பணி துவங்கியது. அப்போது அணை நீர்தேக்கப்பகுதியில் இருந்த 50க்கும் மேற்பட்ட கிராமங்களை ஆங்கிலேயர்கள் காலி செய்தனர்.

அப்போது பண்ணவாடி, கோட்டையூர், சாம்பள்ளி, மூலக்காடு, காவேரிபுரம் உள்பட ஏராளமான கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள், தங்கள் குடியிருப்புகளை காலி செய்து உடமைகளுடன் அருகிலுள்ள மேடான பகுதியில் குடியேறினர். பொதுமக்கள் வழிபாடு நடத்திய ஜலகண்டேஸ்வரர் கோவில், சர்ச், மன்னர்கள் கட்டிய கோட்டைகள் ஆகியவை அப்படியே இருந்தது. கடந்த 1934ல் மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டது. அதன் பின் 120 அடி உயரம் வரை அணையில் நீர் தேக்கி வைக்கப்பட்டதால் மன்னர்கள் கட்டிய கோட்டை, குடியிருப்புகளை சுற்றி கட்டிய அரண்கள், மக்கள் வசித்த இருப்பிடங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி விட்டன. அணையின் நீர்மட்டம் குறையும் போது கோவில் நந்தி, சர்ச் கோபுரம், கோட்டை வெளியில் தெரியும்.

தற்போது அணையின் நீர்மட்டம் 78 அடியாக குறைந்துள்ளதால் சர்ச் கோபுரம், மன்னர்கள் கட்டிய பாதுகாப்பு அரண்கள், மக்கள் வசித்த குடியிருப்புகள் நீருக்கு வெளியில் தெரிகிறது. மன்னர்கள் கட்டிய பாதுகாப்பு அரண்கள் பெரும்பாலான இடங்களில் சிதைந்து விட்டது. குடியிருப்புகளில் பழங்கால மக்கள் பயன்படுத்திய உரல், அம்மி

போன்றவை சிதைந்த நிலையில் கிடக்கிறது. நீருக்கு வெளியில் தெரியும் பகுதிகளை கரையோரத்தில் வசிக்கும் விவசாயிகள், சமன் செய்து சாகுபடி நிலமாக மாற்றி எள், கடலை, சோளம் போன்ற பயிர்களை சாகுபடி செய்துள்ளனர்.

இது குறித்து கொளத்தூர் பகுதியை சேர்ந்த விவசாயி சாமித்துரை கூறியதாவது:அணை கட்டும் முன், கர்நாடகா எல்லையில் உள்ள மேட்டூர் வரை காவிரி கரையோரத்தில் பெரும்பாலான நிலப்பரப்பு திப்புசுல்தான் கட்டுப்பாட்டிலும், மற்றொரு பகுதி பாண்டியர்கள் கட்டுப்பாட்டிலும் இருந்துள்ளது.திப்பு சுல்தான் கோட்டையூர் முதல் மேட்டூர் வரை எல்லை பகுதியில் பெரிய, பெரிய கற்களை அடுக்கி பாதுகாப்பு அரண் அமைத்துள்ளார். அந்த அரண்களுக்குள் குடியிருப்புகள் அமைத்து மக்கள் வசித்தனர்.மன்னர் ஆட்சி காலம் முடிந்த பின், கோட்டைகள் சிதிலமடைந்து விட்டன. அணை கட்டிய பின் பாதுகாப்பு அரண்களும், குடியிருப்பும் நீருக்குள் மூழ்கி விட்டன. நீர்மட்டம் 78 அடியாக குறைந்து விட்டதால் தற்போது அரண்களும், மக்கள் வசித்த குடியிருப்பும் வெளியில் தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**கனராவங்கி மூலம் ரூ.323 கோடி விவசாய கடன்**

கல்லல் : கனரா வங்கி நடப்பாண்டில் 323 கோடி ரூபாய் விவசாய கடன்  வழங்கியுள்ளதென வெற்றியூரில் மத்திய அமைச்சர் சிதம்பரம் பேசினார்.
கல்லல் அருகே வெற்றியூரில் கனரா வங்கி 3,007 வது கிளை திறப்பு விழா நடந்தது. வங்கி தலைவர் மகாஜன் தலைமை வகித்தார். துணை பொது மேலாளர் பாலசுந்தர், எம்.எல்.ஏ.,க்கள் சுந்தரம், ராமசாமி முன்னிலை வகித்தனர்.
வங்கியை திறந்து வைத்து மத்திய அமைச்சர் சிதம்பரம் பேசியதாவது,"" நாட்டில் பல லட்சம் கிராமங்களில் இன்னும் வங்கி சேவையே இல்லை. கடன் கொடுத்து, நாட்டின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருப்பதும் வங்கி சேவை தான். வங்கி டெபாசிட் தொகையில் 75 சதவீதத்தை கடனாக தரவேண்டும்.  ஆனால், 97 சதவீதம் கடன் தருகிறது. நடப்பு ஆண்டில் மட்டும் கல்விக்கடன் 56, விவசாய கடனாக 323 கோடி ரூபாய் தந்துள்ளனர். கனரா வங்கி துவக்கி 104 ஆண்டுகளில் எந்த நிதிநிலை அறிக்கையிலும் நஷ்டம் என்பதே ஏற்படவில்லை'' என பேசினார். மேலாளர் மாரியப்பன் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு அதிக வருவாய் தரும் வறண்ட நில தோட்டக்கலைப் பயிர்கள் : தேசிய கருத்தரங்கில் தகவல்**

பெரியகுளம் : ""வறண்ட நிலங்களில் பயிரிடப்படும் தோட்டக்கலை பயிர்கள் விவசாயிகளுக்கு அதிக வருவாயை ஈட்டித்தருகின்றன'' என பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரியில் நடந்த தேசிய அளவிலான கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.
பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரியும், ராஜஸ்தான் மாநிலம் பிகாநேர் மத்திய வறண்ட நில ஆராய்ச்சி நிலையமும் இணைந்து தேசிய அளவிலான விவசாய விஞ்ஞானிகள் பங்கேற்ற கருத்தரங்கம் நடந்தது. கல்லூரி முதல்வர் பொன்னுச்சாமி தலைமை வகித்தார். பழப்பயிர்கள் துறை தலைவர் செல்வராஜன் முன்னிலை வகித்தார். புதுடெல்லி இந்திய வேளாண் ஆராய்ச்சி மைய துணை இயக்குனர் எச்.பி.சிங் குத்துவிளக்கேற்றி கருத்தரங்கை துவக்கி வைத்தார். கோவை வேளாண்மை பல்கலைக்கழக முதல்வர் குமார், ராஜஸ்தான் மாநிலம் பிகாநேர் வறண்ட நில பழங்கள் இயக்குனர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் மோரே உட்பட தேசிய அளவில் 50 விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.
கோவை வேளாண்மை பல்கலைக்கழக பதிவாளர் சுப்பையன் பேசுகையில்,  இந்தியாவில் பன்னிரெண்டு சதவீதம் அளவிற்கு வறண்ட நிலப்பகுதிகள் உள்ளன. இப்பகுதிகளில் நிலவும் அதிக வெப்பமும், குறைந்த மழையளவும், பொதுவாக தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி திறனை பாதிக்கிறது.  வறண்ட நிலப்பயிர்களான இலந்தை, பெருநெல்லி, மாதுளை மற்றும் சீதாப்பழம் போன்றவை மகசூலில் தரநிர்ணயம் செய்வதற்கு உதவியாக உள்ளது. வறண்ட நில தோட்டக்கலைப் பயிர்கள் விவசாயிகளுக்கு அதிக வருமானம் தருகின்றன. மேலும் பருவத்திற்கு பின் வரும் மழையையும் உபயோகப்படுத்தி கொள்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

வறண்ட நில தோட்டக்கலைப் பயிர்களுக்கான தொழில் நுட்பங்களையும், பயிர் ரகங்களையும் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி மையமும் விவசாயிகளுக்கு விளக்கி வருகிறது. பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி ஆராய்ச்சி மையத்தின் கண்டுபிடிப்பான பி.கே.எம்.1 புளி வகை மற்றும் பி.கே.எம்.1 கொடுக்காபுளி ரகங்கள் வறண்ட நிலங்களில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன என்றார்.
புதுடெல்லி இந்திய வேளாண் ஆராய்சி மையம் துணை இயக்குனர் எச்.பி.சிங்., பேசுகையில், ""மாறிவரும் பருவநிலை மற்றும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான அவசியத்திற்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும். தோட்டக்கலைப் பயிர்களில் "தங்கப்புரட்சி' திருப்திகரமாக உள்ளது என்றார். முன்னதாக தேசிய அளவில் வறண்ட நிலப் பழப்பயிர்கள் புத்தகம் வெளியிடப்பட்டது.

**விவசாய சேவை மையம் திறப்பு**

சின்னமனூர் : சின்னமனூர் தாலுகா சீப்பாலக்கோட்டையில் விவசாய சேவை மையம் திறப்பு விழா நடந்தது. கலெக்டர் முத்துவீரன் பேசுகையில், இங்குள்ள விவசாயிகளுக்கு உதவும் வகையில் மண் பரிசோதனை செய்வதற்கும், நீரின் தன்மையை அறிந்து கொள்வதற்கும் விவசாய சேவை மையம் திறக்கப் பட்டுள்ளது. மாவட்டத்தில் விவசாயத்துறை சார்பில் இது போன்ற சேவை மையங் கள் நான்கும், கூட்டுறவு துறை மூலம் நான்கும் செயல்பட்டு வருகின்றன. விவசாய பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு இதன் மூலம் வேலை கிடைக்கிறது. விவசாயிகள் மண், நீர் பரிசோதனைகளை செய்து அதற்கேற்ப பயிர் செய்து இதன் மூலம் பயனடையலாம் என்றார். விவசாயத்துறை இணை இயக்குனர் நடராஜன், கூட்டுறவு மண்டல இணை பதிவாளர் குருமூர்த்தி, விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**விவசாய பணிகள் முழுவீச்சில் இல்லாததால் மீண்டும் களை கட்டுகிறது மத்திய அரசின் நூறுநாள் வேலைத்திட்டம்**

கோவில்பட்டி : கோவில்பட்டி பகுதியில் விவசாய பணிகள் முழுவீச்சில் இல்லாததால் மத்திய அரசின் நூறுநாள் வேலைத்திட்டம் மீண்டும் களை கட்டத் துவங்கியுள்ளது. மேலும் தற்போது இத்திட்டத்தில் சம்பளம் கூடுதலாக வழங்கப்படுவதால் பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் செல்கின்றனர்.
நமது இந்திய நாடு விவசாயத்தையே முழுமையாக நம்பியுள்ள நாடு என்பதால் அது சம்பந்மான வேலைகளுக்கு எப்போதும் மவுசு அதிகம் தான். ஆனால் தற்போதைய பருவநிலை மாற்றங்களால் தேவையான மாநிலங்களில் போதுமான மழை பெய்யாமல் விவசாய பணிகள் பெரும் சரிவை சந்தித்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு சரிவை சந்தித்து வரும் மாநிலங்களில் தமிழகம் முன்னணியில் இருப்பது வருந்தத்தக்கது. மேலும் வடமாநிலங்களின் சில இடங்களில் நிலவிய வறுமையை மூலதனமாக கொண்ட பண முதலைகளில் பலர் ஏழை எளிய மக்களை கொத்தடிமைகளாக பயன்படுத்தி சராசரி சம்பளத்தை கூட வழங்காமல் குறைவான கூலியை கொடுத்து ஏமாற்றிய சம்பவங்கள் பல இடங்களில் நடந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
இதுபோன்ற அவலநிலையை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் கடந்த 2005ம் ஆண்டு மத்திய அரசின் சார்பில் மிக முக்கியமான சட்டம் கொண்டு வரப்பட்டதாக கூறப்படுகிறத. இதில் நாடு முழுவதும் ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு நூறுநாள் வேலை கொடுக்க தீர்மானிக்கப்பட்டது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இதன் வழியாக விவசாயத்திற்கு ஆதாரமாக விளங்கும் நீர்வரத்து பகுதிகள், கண்மாய்கள் சுத்தம், மழைநீர் சேகரிப்பு போன்ற முக்கிய பணிகளுக்கு இதை பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டதாக கூறப்படுகிறது. தொடர்ந்து இத்திட்டம் கடந்த 2007ம் ஆண்டு வாக்கில் தமிழகத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டதாகவும், கடைசியாக நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் கடந்த 2008ம் ஆண்டு ஏப். முதல்தேதி நடைமுறைப் படுத்தப்பட்டதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் தெரிவிக்கின்றனர். இதன்படியே தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 12 யூனியன்களிலும் கடந்த 01-04-2008 அன்று முதல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டதாக கூறப்படுகிறது. இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது முதல் பொதுமக்கள் மிகவும் ஆர்வமாக வேலைக்கு சென்றனர். தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் என்று பெயரிடப்பட்ட இத்திட்டத்தில் வேலை கொடுக்க மட்டுமின்றி பொதுமக்கள்

எவ்வளவு வேலை செய்ய வேண்டுமென்றும், குறிப்பிட்ட அளவு பணிகள் முடிந்தால் ரூ.80 கூலியாக வழங்க வேண்டுமென்றும் திட்டம் அறிவித்தது. இதனடிப்படையில் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கண்மாய்களுக்கு நீர்வரத்து ஓடைகள், கண்மாய்கள், குளங்கள் ஆகியவற்றில் 20பேர் கொண்ட குழுவினருக்குரிய அளவீடுகளை குறித்து வேலை செய்ய கேட்டுக்கொண்டனர். இதில் 20பேர் கொண்ட குழுவினர் சுமார் 27.20மீ நீளமும், 4மீ அகலமும், 0.3மீ ஆழமும் மண் எடுக்க வேண்டுமென அளந்து கொடுத்தனர். ஆனால் பெரும்பாலான இடங்களில் பொதுமக்கள் அரசாங்கம் நிர்ணயித்த அளவில் வேலை செய்ய மலைத்தனர். ஏனெனில் அரசிடமிருந்து வருகின்ற வேலையென்பதால் வேலை செய்யும் இடத்தில் போய் கையெழுத்து போட்டால் போதும் சம்பளம் கிடைக்கும் என்று அவர்கள் நம்பியது தான் தவறாக அமைந்ததாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.
அதேநேரத்தில் இத்திட்டம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த சென்ற கிராமப்புற பணியாளர்களுக்கு திட்டம் குறித்து போதுமான பயிற்சி இல்லாததால் அவர்கள் பொதுமக்களிடம் வேலை செய்யவதற்கும் கையெழுத்து போடுவதற்கும் இருக்கும் வித்தியாசத்தை சொல்லிக் கொடுக்காததால் பொதுமக்களும் கையெழுத்து போடுவதில் மட்டுமே அக்கறை காட்டியதாக கூறுகின்றனர்.
இதன் காரணமாக குறிப்பிட்ட அளவு வேலை செய்யாததால் அதிகாரிகளும் நடந்த வேலைக்கு மட்டும் கூலியை நிர்ணயம் செய்ததால் பொதுமக்கள் அதிருப்தியடைந்தனர். தொடர்ந்து பொதுமக்கள் சார்பில் பல நாட்கள் யூனியன் ஆபிஸ், ஆர்டிஓ ஆபிஸ், தாலுகா ஆபிஸ், பஞ்., ஆபிஸ் என முற்றுகையும், கோரிக்கை, பேச்சுவார்த்தை என புதியதொரு பிரச்னை ஏற்பட்டது. இந்நிலையில் அரசுத்தரப்பில் இருந்து பொதுமக்களுக்கு குறிப்பிட்ட அளவு வேலை செய்தால் மட்டுமே ரூ.80 கூலி வழங்கப்படும் என்பது குறித்து போதுமான விளக்கம் அளிக்கப்பட்ட சிலநாட்களுக்குள் மழைக்காலம் வந்து விட்டதால் தேசிய வேலை உறுதித்திட்டத்தின் தீவிரம் குறைந்தது.
ஆனால் கோவில்பட்டி பகுதியில் பருவமழை போதுமான அளவில், தேவையான நேரத்தில் பெய்யாததால் இப்பகுதியிலுள்ள ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் உள்ளிட்ட நீராதாரங்கள் நிரம்பவில்லை. இதனால் மானாவாரி பயிர்களை மட்டும் பயிர் செய்த விவசாயிகள் தற்போது அறுவடை சீசனில் இருப்பதால் விவசாயப் பணிகளும் தொய்வடைந்தது. இதனால் பெரும்பாலான இடங்களில் கண்டு கொள்ளப்படாமல் இருந்த தேசிய வேலை உறுதித்திட்டப் பணிகளை பொதுமக்கள் திரும்பிப் பார்க்கும் நிலை ஏற்பட்டது. மேலும் இத்திட்டத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ.80 கூலியை அரசு 100 ரூபாயாக உயர்த்தியதும் இதற்கு காரணமாக அமைந்தது. ஏற்கனவே மண் எடுக்க அரசு நிர்ணயித்த அளவில் மாறுதல் இல்லாமல் கூலியை மட்டும் உயர்த்தியது நூறுநாள் வேலைக்கு செல்லும் பொதுமக்களிடம் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. இதையடுத்து எஞ்சியுள்ள விவசாய பணிகளுக்கு வீட்டிலிருக்கும் மற்ற நபர்களை அனுப்பிவிட்டு பெரும்பாலான பெண்கள் நூறுநாள் வேலைக்கு திரும்பியுள்ளனர்.
குறிப்பாக கோவில்பட்டி பகுதியில் நூறுநாள் வேலைக்கு செல்லும் பெண்கள் கடப்பாறை, மண் அள்ளும் சட்டி, குடங்கள், மண்வெட்டிகள், குத்துவெட்டிகள் உள்ளிட்ட வேலைக் கருவிகளுடன் சென்று நீரின்றி வறண்டுபோன கண்மாய் பகுதிகளை தூர்வாரும் பணியை மேற்கொள்கின்றனர். மேலும் ஒரு ஆண்டில் ஒரு குடும்பத்திற்கு ஏறக்குறைய வாரத்திற்கு இரண்டு நாட்கள் மட்டுமே வேலை கிடைப்பதால் மற்ற நாட்கள் வேலையின்றி தவிக்கிறோம் என்றும், ஆண்டு முழுவதும் வேலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தேசிய வேலை உறுதித்திட்டத்தின் பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கருப்பாநதி அணை நீர்மட்டம் குறைந்தது நெற்பயிர் கருகும் அபாயம்; விவசாயிகள் கவலை**

கடையநல்லூர்:கடையநல்லூர் கருப்பாநதி அணைப்பகுதியில் தண்ணீர் வறண்டு விட்டதையடுத்து அணைக்குட்பட்ட சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் பிசான சாகுபடி நெற்பயிர் கருகும் நிலையில் உள்ளது.
கடையநல்லூர் கருப்பாநதி அணைக்குட்பட்ட பாப்பான்கால்வாய், பெருங்கால்வாய், இடைகால், ஊர்மேழகியான், தேவர்கால்வாய் உள்ளிட்ட கால்வாய்களின் மூலமாக சுமார் 7 ஆயிரத்து 500 ஏக்கர் சாகுபடி நிலங்கள் பயன்பெற்று வருகின்றன. அணையிலிருந்து ஆண்டுதோறும் பிசான சாகுபடிக்காக இந்த கால்வாய் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு அணைப்பகுதிகளில் தொடர்ந்து ஏற்பட்ட மழையின் காரணமாக அணையின் கொள்ளளவு முழு அளவு தொடர்ந்து எட்டிய வண்ணம் இருந்தது.
இருந்தபோதிலும் விவசாய நிலப்பகுதிகளில் போதுமான பருவமழை காணப்படாத நிலையில் பிசான சாகுபடி

மேற்கொள்ள விவசாயிகள் தயக்கம் காட்டி வந்ததனர். கருப்பாநதி அணை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் சாகுபடியை மேற்கொண்டனர். இந்நிலையில் தைமாத நெற்பயிர் அறுவடை ஆரம்பமாக உள்ள நிலையில், பின் நடுவை செய்த விவசாய நிலங்கள் தண்ணீர் போதுமான அளவு இல்லாததால் நெற்பயிர்கள் கருகும் நிலைக்கு காணப்படுகின்றன.
கருப்பாநதி அணைக்குட்பட்ட பெரும்பாலான கால்வாய் பகுதிகளின் மூலமாக பாசனம் பெறக்கூடிய சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் நெற்பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் கவலையில் உள்ளனர். டிசம்பர் மாத இறுதி அல்லது ஜனவரி மாதம் 20ம் தேதிக்குள் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருந்தனர். மழை பொய்த்து விட்டதால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.இருந்த போதிலும் அணைப்பகுதிக்கு வரக்கூடிய ஊற்று தண்ணீரை கொண்டு விவசாய நிலங்களுக்கு தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 72 அடி கொள்ளளவு கொண்ட கருப்பாநதி அணையின் தற்போதைய நீர்மட்டம் 26 அடியாக உள்ளது.

**செம்மை நெல் சாகுபடி திடல்:வேளாண் அதிகாரி ஆய்வு**

திருநெல்வேலி:வாசுதேவநல்லூர் வட்டார பகுதியில் செம்மை நெல் சாகுபடி திடல்களை வேளாண்மை துறை அதிகாரி ஆய்வு செய்தார்.வாசுதேவநல்லூர் வட்டாரம் நீர்வள நிலவள திட்டம் கலிங்கலாறு உபவடிநிலம் திருமலாபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 11 ஹெக்டேர் செம்மை நெல் சாகுபடி திடல்களை நீர்வள நிலவளத் திட்டம் சென்னை பல்துறை திட்ட அலுவலகத்தை சேர்ந்த வேளாண்மை துறை ஆலோசகர் சந்திரகுமார் ஆய்வு செய்தார்.வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் நடப்பு நிதியாண்டில் கலிங்கலாறு உப வடிநில பகுதியில் 60 ஹெக்டேர் பரப்பில் தக்கை பூண்டு சாகுபடி செய்து அதனை உழுது உரமாக்கி பிசான பட்டத்தில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வாசுதேவநல்லூர், பெரியகுளம் பரவு நாரணபுரம், ராப்பைக்குளம், இளங்குளம், புதுக்குளம், குலசேகரப்பேரி மற்றும் கூடலூர், பெரியகுளம் பரவு ஆகிய குள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.குலசேகரப்பேரி குளப்பரவில் அமைக்கப்பட்டுள்ள 11 ஹெக்டேர் செம்மை நெல் சாகுபடி திடல் மற்றும் அதனை சுற்றியுள்ள ஏற்பு திடல்கள் ஆகியவற்றையும் நீர்வள நிலவளத் திட்ட வேளாண்மை துறை ஆலோசகர் சந்திரகுமார் மற்றும் உதவி பொறியாளர் ஜான் ஆகியோர் ஆய்வு செய்தனர்.வேளாண்மை அலுவலர் ராமசாமி, துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சம்சுதீன், சுபாஷ் சந்திரபோஸ், பால்ராஜ், செல்லையா, ஆறுமுகம், அண்ணாத்துரை செய்திருந்தனர்.கூடலூர் கிராமத்தில் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் 14 ஹெக்டேர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள செம்மை நெல் சாகுபடி திடல்களையும், சங்குபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 10 ஹெக்டேர் மக்காசோளம் திடல்களையும் பார்வையிட்டனர்.

**நெல்லை மாவட்டத்தில் 1.90 லட்சம்:கோழிகளுக்கு நாளை முதல் தடுப்பூசி**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் 1.90 லட்சம் கோழிகளுக்கு நாளை (2ம் தேதி) முதல் தடுப்பூசி போடப்படுகிறது.தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 2ம் தேதி முதல் 15ம் தேதி வரை கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது.நெல்லை மாவட்டத்தில் 1.90 லட்சம் கோழிகளுக்கு நாளை (2ம் தேதி) தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி முகாம் இரு வாரங்களுக்கு நடக்கிறது. அனைத்து கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் பகுதிகளில் கிராமங்கள் தோறும் தினமும் தடுப்பூசி முகாம் நடத்தப்படும்.எனவே, கோழி வளர்ப்போர் தங்கள் பகுதிகளில் கோழிகளுக்கு தடுப்பூசி முகாம் நடக்கிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி கோழி வளர்ப்போர் தங்கள் கோழிகளை கழிச்சல் நோயில் இருந்து காப்பாற்றி பொருளாதார முன்னேறம் அடைய வேண்டும் என்று கலெக்டர் ஜெயராமன் தெரிவித்தார்.

**உள்நாட்டு மீன்வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி**

நீடாமங்கலம்:நீடாமங்கலத்தில் விவசாயிகளுக்கு உள்நாட்டு மீன் வளர்ப்புத் தொழில்நுட்ப பயிற்சி 4 நாட்கள் நடந்தது.வேளாண் அறிவியல் நிலையம், நபார்டு வங்கி ஆகியவை இணைந்து நடத்தின. பயிற்சியை தொடக்கி வைத்து ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ் பேசுகையில், ஆசிய அளவில் இந்தியா மீன் உற்பத்தியில் 3வது இடம், வளர்ப்பு மீன் உற்பத்தியில் 2வது இடம் பெற்றுள்ளது. மொத்த மீன் உற்பத்தி 3.98 லட்சம் டன் ஆகும். நன்னீர் மீன் உற்பத்தி வாயிலாக மட்டும் 1.60 லட்சம் டன் அளவிலான மீன்களை உற்பத்தி செய்து, நமது மீன் தேவையைக் கணிசமான அளவுக்கு பூர்த்தி செய்துள்ளோம் என்றார். பயிற்சி நிறைவு விழாவில் விரிவாக்க கல்வி இயக்குனர் கலைச்செல்வன் பேசுகையில், தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பதற்கு ஏதுவான சூழ்நிலை அதிகமாக காணப்படுகிறது.

2.5 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயி ஒருங்கிணைந்த பண்ணையத்தை முறையாக செயல்படுத்தினால் ஒரு மாதத்திற்கு 16 ஆயிரம் ரூபாய் வருமானமாக பெறலாம். உள்நாட்டு மீன் வளர்ப்பு சமீப காலமாகப் பிரபலமடைந்து வருகிறது என்றார்.நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் ராகவன், மீன்வளத்துறை உதவி இயக்குனர் வெங்கடசாமி, தஞ்சை மாவட்ட மீன்வள பயிற்சிமைய இணைப் பேராசிரியர் வீரபத்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதில் 30 விவசாயிகள் பயிற்சி பெற்றனர். உள்நாட்டு மீன் வளர்ப்பு தொழில்நுட்பம் என்ற புத்தகமும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் செங்குட்டுவன் வரவேற்றார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் பவுன்ராஜ் நன்றி கூறினார்.

**மரபணு மாற்ற கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு அரக்கோணத்தில் பெண்கள் உண்ணாவிரதம்**

அரக்கோணம்:மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிகாய்க்கு எதிர்ப்பு தெரிவித்து அரக்கோணத்தில் உண்ணாவிரத போராட்டம் நடந்தது.தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு, மரபணு மாற்றத்துக்கு எதிரான தென்னக அமைப்பு இணைந்து, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி.கத்தரிகாய்க்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தை அரக்கோணம் தாசில்தார் அலுவலகம் முன்பாக நடத்தினர்.

பெண்கள் இணைப்பு குழு நெமிலி வட்டார ஒருங்கிணைப்பாளர் மேரி தலைமை வகித்தார். வாசுகி வரவேற்றார். உண்ணாவிரதத்தை அமைப்புசாரா தொழிலாளர் சங்க மாநில தலைவி அன்னக்கிளி துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லோகநாயகி, ஆதிதமிழர் ஜனநாயக இயக்க மாநில தலைவர் குருவை குமார் மற்றும் நிர்வாகிகள் அம்மு, அமுதாவள்ளி, பெலிசி, ஆரோக்கியமேரி, சீமா, பாக்கியவதி, அபிராமி, மலர், ராதிகா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.குழு தலைவி தேவகி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். நெமிலி வட்டார பணியாளர் புவனேஸ்வரி நன்றி கூறினார்.

**விவசாயிகளை அலைகழிக்கும் அதிகாரிகள்**

அணைக்கட்டு:அரசு சொன்ன வட்டியில்லா விவசாய கடன் கேட்டு செல்பவர்களை கூட்டுறவு சங்க அதிகாரிகள் விரட்டுவதால் விவசாயிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகளுக்கு கடன் தள்ளுப்படி செய்ததோடு மீண்டும் கோடிக்கணக்கில் வட்டியில்லா விவசாய கடன் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கி வருவதாக ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் கூட்டங்களில் பேசி வருகின்றனர்.

உன்மையிலுமே அப்படி வழங்கப்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. அதிகாரிகளின் கெடிபிடிகளால் விவசாயிகள் அலைகழிக்கப்படுவதுதான் மிச்சம். இப்படிதான் வேலூர் ஒன்றியத்தில் உள்ள ஊசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் தங்களது நிலங்களில் பயிர் செய்ய அரசு அறிவித்துள்ளப்படி நிலத்தின் பெயரிலோ, அல்லது நகையின் பெயரிலே வட்டியில்லா விவசாய கடன் கேட்டு சென்றால் செய்யப்போகும் பயிருக்கு வருவாய் துறையினரிடம் அடங்கல் வாங்கி வரும்படி கூறுகின்றனர்.

வருவாய் துறையினரோ, ஏற்கனவே செய்த பயிருக்குத்தான் அடங்கல் கொடுக்க முடியும், செய்யப்போகும் பயிர் குறித்து எதுவும் தெரியாமல் அடங்கல் கொடுக்க முடியாது என்கின்றனர். இதை கூட்டுறவு சங்க அதிகாரிகளிடம் சொன்னாலும், அடங்கல் வாங்கி வந்தால்தான் கடன் கொடுக்க முடியும் என்று மீண்டும் அதே பல்லவியை பாடுகின்றனர்.

இப்படி அதிகாரிகளின் கெடுபிடி காரணமாக விவசாயிகள் அலைக்கழிக்கப் படுவதால் கூட்டுறவு சங்கதில் கடன் வாங்க வந்தவர்கள் கடன் இல்லை என்றாலும் பரவாயில்லை, ஆளை விட்டால் போதும் என்ற நிலைக்கு வந்து ஓட்டம் பிடிக்கின்றனர்.

இதுபோன்ற சமயங்களில்தான் விவசாயிகள் தனியாரிடம் கந்துவட்டி, மீட்டர் வட்டி என கடன் வாங்கி அதிலிருந்து மீளமுடியாமல் தவியாய் தவித்து வருகின்றனர். இப்படி அதிகாரிகளின் அலட்சியத்தால் "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத' கதையாக அரசு அறிவித்துள்ள வட்டியில்லா விவசாய கடன் கிடைக்காமல் உள்ளது.

இது குறித்து ஊசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் (பொறுப்பு) ராஜேந்திரனிடம் கேட்டதற்கு, தனி அலுவலர் உத்தரவுபடிதான் கடன் கேட்டு வரும் விவசாயிகளிடம் செய்யப்போகும் பயிர் குறித்து அடங்கல் கேட்கிறோம் என்று கூறினார்.

இதுபற்றி தனி அலுவலர் ஜீவன் சிங்கிடம் கேட்டதற்கு, வட்டியில்லா விவசாய கடன் கேட்டு வருபவர்களிடம் அடங்கல் வாங்கச் சொன்னது உண்மை. அதே நேரத்தில் செய்யப்போகும் பயிருக்கு அடங்கல் கேட்கவில்லை. பயிர் செய்ய பாசன வசதி இருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்காக ஏற்கனவே செய்த பயிர் குறித்த அடங்கல் இருந்தாலும் பரவாயில்லை என்று கூறினார்.

கருத்து வேறுபாடு?: ஊசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்(பொறுப்பு) ராஜேந்திரனோ வட்டியில்லா விவசாய கடன் கேட்டு வருபவர்களிடம் செய்யப்போகும் பயிருக்கு அடங்கல் கேட்கிறார். அதே நேரதில் கூட்டுறவு சங்க தனி அலுவலர் ஜீவன் சிங்கோ செய்யப்போகும் பயிருக்கு கேட்கவில்லை...ஏற்கனவே செய்த பயிருக்கு அடங்கல் வாங்கியிருந்தாலும் பரவாயில்லை என்கிறார்.

இப்படி முரண்பட்டு தகவலுக்கு காரணம் இருவருக்கும் இடையே நிலவும் கருத்து வேறுபாடுதான். ஒவ்வொரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கும் ரூ. 50 லட்சம் வீதம் கடன் வழங்கலாம் என்று இலக்கு நிர்ணயம் செய்ப்பட்டுள்ளது. மற்ற கூட்டுறவு கடன் சங்களில் செயலாளர்களும், தனி அலுவலர்களும் ஒன்றாக சேர்ந்து கடன் கொடுக்கும் இலக்கை பூர்த்தி செய்த நிலையில் ஊசூர் சங்கத்தில் மட்டும் இப்படி கருத்து வேற்றுமையால் கடன் வழங்கும் இலக்கை பூர்த்தி செய்யாமல் தேக்க நிலையிலேயே காணப்படுகிறது.

இந்த விஷயத்தில் மேல் அதிகாரிகள் தலையீட்டு இந்த கருத்து வேறுபாடு பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்து விவசாய கடன் கேட்டு வருபவர்களை அலைகழிக்க செய்வதை தவிர்க்க வேண்டும் என்பதே விவசாயிகளின் பெருத்த எதிர்பார்ப்பாக உள்ளது.

**செம்மை நெல் சாகுபடி வயல் தின விழா**

சேத்தூர் : ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ராஜபாளையம் அருகே மேட்டுப்பட்டியில் செம் மை நெல் சாகுபடி வயல் தின விழா கொண்டாடப்பட்டது.
செம்மை நெல் சாகுபடி முறையை கடைப்பிடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து மாவட்ட விவசாய இணை இயக்குனர் பாண்டியராசு பேசினார். நடப்பு பருவத்தில் செம்மை நெல் சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடந்தது. பயிர் பாதுகாப்பு உத்திகள் குறித்து ராஜபாளையம் விவசாய உதவி இயக்குனர்

தனசேகரன் பேசினார். 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். துணை விவசாய அலுவலர் ராமன், விவசாய உதவி அலுவலர்கள் முத்துசரவணன், சுந்தரராஜன், பாலகுரு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**நீர் வள நில வள திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்**

அருப்புக்கோட்டை : அருப்புக்கோட்டை பாரதி நடராஜன் திருமண மண்டபத்தில், விருதுநகர் மாவட்ட வேளாண் விற் பனை மற்றும் வேளாண் வணிகதுறை சார்பாக, தமிழ்நாடு நீர்வள நில வள திட்டம் செங்கோட்டையாறு உப வடிநில பகுதி விவசாயிகள் மற்றும் கொள் முதலீட்டாளர்கள் கருத்து பரிமாற்றம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றிய பணிமனை கூட்டம் நடந்தது. விளை பொருட் களை அதிக விலைக்கு விற்பனை செய்தல் பற்றிய விளக்கங்களை ஐ.டி.சி., கிளை மேலாளர் செந்தில் குமார் கூறினார். மக்காசோளம் விற்பனை வாய்ப் புகளை பற்றி சுகுணா பவுல்ட்ரி மேலாளர் காளிசரன் பேசினார். மக்காசோளம், பயறு வகைகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக என்.பி.ஆர்., வேர் ஹவுஸ் இயக்குநர் ஜெயராமன் விளக்கினார். ஏற்பாடுகளை துணை இயக்குநர் கணேசன் ஆலோசனையின் பேரில், வேளாண் அலுவலர் சந்திரமோகன், உதவி வேளாண் அலுவலர்கள் பால்துரை, பெரிய கருப்பன், பாண்டி செல்வி செய்தனர்.


**விலை உயருமென்ற எதிர்பார்ப்பில் பாதுகாக்கப்படும் மக்காச்சோளம்**

பல்லடம்: பல்லடம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடனாக 31 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது. மக்காச்சோளம் விலை உயரும் என்ற எதிர்பார்ப் பால், 1,000 மூட்டைகளை ஒழுங்குமுறை விற் பனை கூடத்தில் விவசாயிகள் இருப்பு வைத் துள்ளனர்.பல்லடம் - மங்கலம் ரோட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் உள்ளது. 1,000 டன் வேளாண் விளைபொருட்கள் வரை இருப்பு வைக்கும் வசதியுள்ளது. மக்காச்சோளம், கொப்பரை, மஞ்சள், கொண்டைக்கடலை, நிலக்கடலை,நெல், பாக்கு, எள், உள்ளிட்ட 16 வகை வேளாண் விளைபொருட்களுக்கு ஒழுங்குமுறைவிற்பனைக் கூடத்தில் பொருளீட்டுக் கடன் வழங் கப்படுகிறது.விற்பனைக்கூடத்தில் அடமானம் வைக்கப்படும் விளைபொருட்களின் மதிப்பில் 50 சதவீதம் பொருளீட்டுக் கடனாக வழங்கப்படுகிறது. மிக அதிகபட்சமாக, ஒரு விவசாயிக்கு ஐந்து சதவீத வட்டியில் ஒரு லட்சம் ரூபாய் வரை பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது.

ஒரு விவசாயி அதிகபட்சமாக 180 நாட்கள் வரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தன்னுடைய விளைபொருட்களை அடமானமாக வைக்க முடியும்.முதல் 15 நாட்களுக்கு விவசாயிகளிடம் வட்டி வசூலிக்கப்படுவதில்லை. இந்த நாட்கள் நீங்கலாக, விவசாயிகள் எத்தனை நாட்கள் அடமானம் வைத்துள்ளார்களோ, அந்த நாட்களுக்கு மட்டும் ஐந்து சதவீத வட்டி கணக்கிடப்படுகிறது. கடந்த ஆண்டு ஏப்., முதல் தேதியில் இருந்து தற்போது வரை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மிளகாய் வற்றலுக்கு 50 ஆயிரம் ரூபாய், மக்காச்சோளத் துக்கு ஐந்து லட்சத்து 35 ஆயிரம் ரூபாய், கொப்பரைக்கு 26 லட்சம் ரூபாய் என, 31 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பொருளீட்டுக் கடனாக வழங்கப் பட்டுள்ளது.தற்போது, பல்லடம், பொங்கலூர் சுற்றுவட்டாரத்தில் மக்காச்சோளம் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. அறுவடை நேரம் என்பதால், நூறு கிலோ மூட்டைக்கு 860 ரூபாய் முதல் 880 ரூபாய் வரை கொள்முதல் விலையாக உள்ளது. வரும் மார்ச், ஏப்., மாதம் மூட்டைக்கு 1,000 ரூபாய் வரை விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், 1,000 மூட்டைகள் வரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருப்பு வைத்துள்ளனர். விவசாயிகள் தொடர்ந்து இருப்பு வைத்து வருவதால், பல்லடம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், மக்காச் சோளம் இருப்பு அதிகரித்து வருகிறது.

எதிர்ப்பாளர்களிடம் சிக்கினார் அமைச்சர்

பதிவு செய்த நாள் 2/1/2010 12:18:33 AM



ஐதராபாத் : மரபணு மாற்று கத்திரிக்காயை பயிரிடுவது தொடர்பாக கருத்து கேட்க சென்ற மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷை எதிர்ப்பாளர்கள் முற்றுகையிட்டனர்.

மரபணு மாற்று கத்திரிக்காயை (பி.டி. கத்திரிக்காய்) பயிரிடுவது தொடர்பாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கருத்து கேட்டு வருகிறார். இதுவரை 5 கூட்டங்களை அவர் நடத்தியுள்ளார். ஐதராபாத்தில் நேற்று இந்த கூட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற ஜெய்ராம் ரமேஷை பி.டி. கத்திரிக்காயை எதிர்க்கும் சுதேதி ஜாக்ரன் மஞ்ச் மற்றும் கம்யூனிஸ்ட் ஆதரவு விவசாய சங்கங்களை சேர்ந்தவர்கள் முற்றுகையிட்டு கோஷமிட்டனர்.

பி.டி. கத்திரிக்காயை ஆதரிப்பவர்கள் எதிர்ப்பு கோஷமிட்டனர். இதனால், கருத்து கேட்பு அரங்கில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

எதிர்ப்பாளர்களை அமைதி காக்கும்படி ஜெய்ராம் ரமேஷ் விடுத்த வேண்டுகோள் வீணானது. எதிர்ப்பாளர்கள் அரங்கத்தை விட்டு வெளியேறினர். பின்னர், கூட்டம் அமைதியாக நடந்தது.

இது தொடர்பாக பேட்டி அளித்த ஜெய்ராம் ரமேஷ், ''இதற்கு முன்பு நடைபெற்ற 5 கருத்து கேட்பு கூட்டங்களில் இதுபோன்ற சம்பவம் நடக்கவில்லை. பி.டி. கத்திரிக்காயை இந்தியாவில் பயிரிட அனுமதிக்கும் விஷயத்தில் எந்த நிறுவனத்துக்கும் சாதகமாக நடக்க மாட்டேன். பொதுமக்களின் கருத்து கேட்கப்பட்ட பிறகே எந்த முடிவும் எடுக்கப்படும்'' என்றார்.

### பட்டுப்புழு விவசாயிகளுக்கு எஸ்எம்எஸ்ஸில் விலை விவரம்

பதிவு செய்த நாள் 2/1/2010 12:06:11 AM



பெங்களூர் : கர்நாடக மாநில பட்டுப்புழு விவசாயிகளுக்கு கூட்டுப்புழு விலை, பட்டு நூல் விலை, மழை புயல் பற்றிய விவரங்கள் எஸ்எம்எஸ் மூலம் அனுப்பும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
இதுகுறித்து கர்நாடக பட்டுப்புழு வளர்ப்புத்துறை அமைச்சர் வேங்கடரமணப்பா கூறியதாவது:
விவசாயிகள் ஒரு ஆண்டு முழுக்க கூட்டுப்புழு விலை, பட்டு விலை மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள ரூ.600 சந்தா செலுத்த வேண்டும். சந்தா செலுத்தும் பொழுது தங்கள் மொபைல் தொலைபேசி எண்ணையும் குறிப்பிட வேண்டும். இந்த வசதி மிகவும் எளிமையான முறையில் செயல்படுத்தப்படுகிறது.

சந்தா செலுத்திய விவசாயிகளுக்கு ராமனகரம், சன்னப்பட்னம், சித்தலஹட்டா ஆகிய நகரங்களில் உள்ள மார்க்கெட்டுகளில் இருந்து விலை விவரங்கள் எஸ்எம்எஸ் மூலம் அனுப்பப்படும். கூட்டுப்புழுக்களின் விலை விவரங்களோடு பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் விவசாயிகளுக்கு தேவையான பருவ நிலை, உஷார் அறிவிப்புகள் ஆகியவையும் மொபைல் மூலமாகவே விவசாயிகளுக்கு கிடைக்கும்.

இது போன்ற மொபைல் தகவல் முறை மகாராஷ்டிர மாநிலத்தில் அமல் செய்யப்படுகிறது. அங்கு ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் விலை விவரங்களுக்காக சந்தா செலுத்துகின்றனர்.

கர்நாடகாவில் உள்ள ராமனகரம், சித்தலஹட்டா ஆகிய இரண்டு கூட்டுப்புழுசந்தைகளிலும் இடைத் தரகர்களை ஒழிக்க சிசிடிவி அமைப்பு ஏற்படுத்தப்படும். இடைத்தரகர்கள் மார்க்கெட்டுக்குள் நுழைந்ததும் சிசிடிவி மூலம் கண்காணித்து வரும் அதிகாரிகள் எச்சரிக்கை வெளியிடுவார்கள் என்றார்.

### விளைநிலத்தை பாதுகாக்க சட்டம் கொண்டு வரப்படும்

பதிவு செய்த நாள் 2/1/2010 12:28:19 AM



நாகர்கோவில் : குமரி மாவட்டம், தோவாளையில் மலரியல் ஆராய்ச்சி நிலைய கட்டிடத் திறப்பு விழா, ஆய்வக அடிக்கல் நாட்டு விழா நேற்று நடந்தது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்தார். குமரி மாவட்ட கலெக்டர் ராஜேந்திர ரத்னூ முன்னிலை வகித்தார்.

புதிய கட்டிடத்தை திறந்து வைத்து, ஆய்வக கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசியதாவது:

தமிழகத்தில் அரிசி உற்பத்திக்கான நிலப்பரப்பு 21 லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேராக உள்ளது. 2009&10ம் ஆண்டில் 81.7 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நெல் உற்பத்தி திறனில் தமிழகம்தான் முதன்மையாக உள்ளது. நடப்பு ஆண்டில் மொத்த உணவு உற்பத்தி 110.5 லட்சம் டன் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2005&06ம் ஆண்டில் அரிசி உற்பத்தி 52.1 லட்சம் டன்னாக இருந்தது.

நெய்யாறு அணையில் இருந்து 1924ம் ஆண்டு தமிழக&கேரள அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்த அடிப்படையில் தண்ணீர் தந்து வந்தனர். அந்த தண்ணீரை இப்போது நிறுத்திவிட்டனர். இதனால், 2360 ஹெக்டேர் வரை பாசனம் தடைபட்டுள்ளது. ஒப்பந்தத்தை புதுப்பித்து தண்ணீர் தர வேண்டுமென கேரள அரசுடன் தமிழக அரசு பேச்சு நடத்தி வருகிறது.

பக்கத்து மாநிலத்தில் இருந்து வருபவர்கள், சாலையோர நிலங்களை 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று வாங்கி போடுகின்றனர். இதனால், பின்னால் உள்ள நிலத்திற்கு சிறுகுறு விவசாயிகள் கடந்து செல்ல முடிவதில்லை. தண்ணீர் பாசனம் தடைபடுகிறது. வேறு வழியின்றி, அவர்களுக்கே குறைந்த விலையில் நிலத்தை விற்கின்றனர். இதனால், விவசாயம் பாதிக்கிறது.

கேரளாவில் விளைநிலங்களை விற்பதை தடுக்க தடைச் சட்டம் இருப்பதாக கலெக்டர் தெரிவித்தார். அதுபோன்ற சட்டத்தை, குமரி மாவட்ட மக்களின் நன்மை கருதி, தமிழகத்திலும் கொண்டுவர முதல்வருடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார். விழாவில், அமைச்சர் சுரேஷ்ராஜன், ஹெலன்டேவிட்சன் எம்.பி.,எம்.எல்.ஏ.க்கள் ராஜன், ஜெயபால் ஆகியோர் பங்கேற்றனர்.

---

### *இறக்குமதி – விளைச்சல் அதிகரிப்பால்*
### *பருப்பு வகைகள், அரிசி விலை வீழ்ச்சி*
### *மளிகை பொருட்கள் விலை மேலும் குறைய வாய்ப்பு*

*சென்னை, பிப்.1–*
*இறக்குமதி மற்றும் விளைச்சல் அதிகரிப்பால் பருப்பு வகைகள், அரிசி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. மலிகை பொருட்களின் விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது.*

*துவரம் பருப்பு விலை வீழ்ச்சி*
*இந்த ஆண்டு பருப்பு வகைகளின் விலை வரலாறு காணாத வகையில் கிடுகிடுவென உயர்ந்தது. தற்போது மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் துவரம் பருப்பு நல்ல விளைச்சல் கண்டுள்ளதால் விலை குறைய தொடங்கியுள்ளது. மேலும், ஆப்பிரிக்க நாடுகளில் இருந்தும் துவரம் பருப்பு இறக்குமதி செய்யப்படுவதால் தொடர்ந்து விலை குறைந்து வருகிறது. கடந்த வாரம் 100 கிலோ எடையுள்ள மூடை (முதல் ரகம்) ரூ.7 ஆயிரத்திற்கு விற்பனையானது தற்போது ரூ.6,500 ஆக குறைந்துள்ளது. ஒரு கிலோ துவரம் பருப்பு (முதல் ரகம்) ரூ.75–ல் இருந்து ரூ.68 ஆக குறைந்துள்ளது. இரண்டாம் ரகம் ரூ.60–ல் இருந்து ரூ.52 ஆகவும், 3–வது ரகம் ரூ.48–ல் இருந்து ரூ.43 ஆகவும் விலை குறைந்துள்ளது. இந்த வாரம் இறுதிக்குள் மூடைக்கு ரூ.1,000 வரை மேலும் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*சர்க்கரை*
*உளுந்தம் பருப்பு 100 கிலோ எடை கொண்ட மூடை கடந்த வாரம் ரூ.6,800–க்கு விற்பனையானது தற்போது ரூ.6,400 ஆக குறைந்துள்ளது. ஒரு கிலோ உளுந்தம் பருப்பு (முதல் ரகம்) ரூ.72–ல்*

இருந்து ரூ.67 ஆக குறைந்துள்ளது. 2–ம் ரக பர்மா உளுந்தம் பருப்பு கிலோ ரூ.66–ல் இருந்து ரூ.61 ஆகவும் விலை குறைந்துள்ளது. ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் விளைச்சல் அதிகமாக உள்ளதாலும், பர்மாவில் இருந்து அதிகம் இறக்குமதி செய்யப்படுவதாலும் உளுந்தம் பருப்பு மூடை ஒன்றுக்கு இந்த வார இறுதிக்கு ரூ.500 குறைய வாய்ப்பு உள்ளது.
கடந்த வாரம் சர்க்கரை (சீனி) 100 கிலோ கொண்ட மூடை ரூ.4,100–க்கு விற்பனை ஆனது. தற்போது, ரூ.4 ஆயிரமாக குறைந்துள்ளது. இதனால், ரூ.44–க்கு விற்பனையான ஒரு கிலோ சர்க்கரை ரூ.42 ஆக குறைந்துள்ளது. இந்தியாவில் கரும்பு விளைச்சல் குறைந்துள்ளதால், சர்க்கரை விலை மேலும் குறைய வாய்ப்பு இல்லை என்றாலும், வெளிநாடுகளில் இருந்து சர்க்கரை இறக்குமதி செய்யும் பட்சத்தில் விலை குறைய வாய்ப்பு உள்ளது.

மிளகாய்–புளி
தமிழகத்தில், ராமநாதபுரம், விளாத்திகுளம், பரமக்குடி ஆகிய பகுதிகளில் விளையும் குண்டு மிளகாய் வத்தல் ஒரு கிலோ (முதல் ரகம்) ரூ.135–ல் இருந்து ரூ.115 ஆக குறைந்துள்ளது. 2–வது ரகம் ஒரு கிலோ ரூ.115–ல் இருந்து ரூ.90 ஆக குறைந்துள்ளது. நீட்டு மிளகாய் வத்தல் ஒரு கிலோ ரூ.80–ல் இருந்து ரூ.65 ஆக சரிந்தது.

குஜராத், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பூண்டு அதிகமாக விளைந்துள்ளதால், விலை குறைய தொடங்கியுள்ளது. ஒரு கிலோ பூண்டு (முதல் ரகம்) ரூ.100–ல் இருந்து ரூ.70 ஆகவும், 2–வது ரகம் ரூ.80–ல் இருந்து ரூ.60 ஆகவும் குறைந்துள்ளது. இந்த மாதம் (பிப்ரவரி) மேலும் குறைய வாய்ப்பு உள்ளது.

தமிழகம் மற்றும் கர்நாடகாவில் இந்த ஆண்டு புளி விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால் ஒரு கிலோ புளி (முதல் ரகம்) ரூ.65–ல் இருந்து ரூ.50 ஆகவும், 2–வது ரகம் ரூ.50–ல் இருந்து ரூ.35 ஆகவும் விலை குறைந்துள்ளது.

எண்ணெய் வகைகள்
ராஜஸ்தான் மாநிலத்தில் அதிகமாக விளையும் கொத்தமல்லி (தணியா) ஒரு கிலோ கடந்த ஆண்டு ரூ.100–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதனால், அதிகம் பணம் ஈட்டும் பொருட்டு, நெல்லை, விருதுநகர், சங்கரன்கோவில், சாத்தூர் ஆகிய பகுதிகளிலும் இந்த ஆண்டு கொத்தமல்லி பயிரிட்டனர். இங்கிருந்து சந்தைக்கு தற்போது கொத்தமல்லி வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ கொத்த மல்லி ரூ.70–க்கு விற்பனையானது, தற்போது ரூ.55 ஆக குறைந்துள்ளது.

இதேபோல், எண்ணெய் வகைகளில் பாமாயில் ஒரு கிலோ ரூ.42–ல் இருந்து ரூ.40 ஆகவும், சன் பிளவர் ஆயில் ரூ.52–ல் இருந்து ரூ.50 ஆகவும், கடலை எண்ணெய் ரூ.72–ல் இருந்து ரூ.70 ஆகவும் குறைந்துள்ளது. இதேபோல், அக்மார்க் நல்லெண்ணெய் ஒரு கிலோ ரூ.115–ல் இருந்து ரூ.105 ஆகவும், சாதா நல்லெண்ணெய் ரூ.70–ல் இருந்து ரூ.60 ஆகவும் விலை குறைந்துள்ளது. தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ (முதல் ரகம்) ரூ.75–ல் இருந்து ரூ.70 ஆகவும், 2–வது ரகம் ரூ.65–ல் இருந்து ரூ.60 ஆகவும் விலை குறைந்துள்ளது.

அரிசி விலை குறைவு
தமிழகத்தில் 25 மாவட்டங்களில் நெல் அறுவடை முடிந்துள்ளது. இன்னும் 15 மாவட்டங்களில் அறுவடை பாக்கியுள்ளது. இந்த நிலையில், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து தினமும் 50 முதல் 100 லாரிகள் வரை நெல் வந்து கொண்டிருப்பதால் அரிசி விலை குறைய வாய்ப்பு உள்ளதாக தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறினார்.

அரிசி வகைகளில் குச்சி ரக பொன்னி (புதியது) 75 கிலோ கொண்ட மூடை ரூ.1,500–ல் இருந்து ரூ.1,300 ஆக குறைந்துள்ளது. ஒரு கிலோ ரூ.20–ல் இருந்து ரூ.15 ஆக குறைந்துள்ளது. இதேபோல், சிகப்பு பொன்னி ஒரு கிலோ ரூ.22–ல் இருந்து ரூ.20 ஆகவும், அதிசய பொன்னி ரூ.24–ல் இருந்து ரூ.22 ஆகவும், வெள்ளை பொன்னி ரூ.28–ல் இருந்து ரூ.26 ஆகவும் குறைந்துள்ளது. இட்லி அரிசி ஒரு கிலோ ரூ.24–ல் இருந்து ரூ.22 ஆக குறைந்துள்ளது. அரிசி வகைகளில் பழையது அதே விலையில் நீடிக்கிறது.

## பி.டி. கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு
## மத்திய மந்திரி ஜெயராம் ரமேஷை முற்றுகையிட்டு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

ஐதராபாத், பிப்.1–
மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக அனுமதிப்பதை கண்டித்து மத்திய சுற்றுச் சூழல் மந்திரி ஜெயராம் ரமேஷை விவசாயிகள் நேற்று முற்றுகையிட்டனர்.

*பி.டி. கத்தரிக்காய்*

*மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை (பி.டி.கத்தரிக்காய்) இந்தியாவில் அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான ஒப்புதலை உயிரி தொழில்நுட்ப ஒழுங்குமுறை வாரியம் கடந்த ஆண்டு அளித்தது. அதை தொடர்ந்து, பி.டி. கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக விற்பனை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.*

*பி.டி. கத்தரிக்காயை பயிரிட்டு அறுவடை செய்த பிறகு, அந்த நிலத்தில் உரச் சத்து குறைந்து விடும். மேலும், கத்தரிக்காய் மறு உற்பத்திக்கான விதைகளை சேமிக்கும் உரிமையும் விவசாயிகளிடம் இருந்து பறிக்கப்படுகிறது. ஒவ்வொரு முறையும் விதைகளை பணம் கொடுத்து வாங்க வேண்டும். அதனால், பி.டி. கத்தரிக்காய்க்கு விவசாயிகள், சமூக ஆர்வலர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.*

*ஆச்சாரியா ரங்கா வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரான சவுத்திரி, "மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்திரிக்காயில் உள்ள விஷத் தன்மை காரணமாக, புழு மற்றும் பூச்சிகள் தாக்காது. எனவே, அந்த கத்தரிக்காயை சாப்பிடும் மனிதர்களையும் அந்த விஷத்தன்மை தாக்கும் அபாயம் உள்ளது'' என்றார்.*

*ஆலோசனை கூட்டம்*

*எனவே, நாடு முழுவதும் விவசாயிகள் மற்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு அந்த கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக வெளியிட மத்திய அரசு தீர்மானித்தது. அதன்படி, பல்வேறு நகரங்களிலும் தொடர்ச்சியாக விவாதங்கள் மற்றும் ஆலோசனை கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன்படி, ஐதராபாத் நகரில் நேற்று ஆலோசனை கூட்டம் நடந்தது. தோட்ட வேளாண்மைக்கான மத்திய ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் சார்பாக கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக, மத்திய சுற்றுச் சூழல் மந்திரி ஜெயராம் ரமேஷ் வந்தார். கூட்ட அரங்கத்துக்குள் அவர் நுழைந்ததும் பி.டி. கத்தரிக்காய் விற்பனையை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. கூட்டத்தில் பங்கேற்க வந்த விவசாயிகள் அனைவரும் மத்திய மந்திரியை சூழ்ந்து கொண்டு சரமாரியாக கேள்விகளை எழுப்பினர்.*

*கூச்சல், குழப்பம்*

*ஆந்திர மாநில விவசாய சங்க தலைவர் எம்.கொண்டா ரெட்டி தலைமையிலான விவசாயிகள், தர்ணாவில் ஈடுபட்டனர். கழுத்தில் கத்தரிக்காய் மாலைகளை அணிந்தபடி ஜெய்ராம் ரமேசுடன் வாக்குவாதம் செய்தனர். சமூக ஆர்வலர்கள், ஜன விஞ்ஞானி வேதிகா, பாதுகாக்கப்பட்ட உணவு அமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களை சேர்ந்தவர்களும் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால், கூட்டம் நடைபெற்ற அரங்கம் முழுவதும் கூச்சல், குழப்பம் நீடித்தது. பி.டி. கத்தரிக்காயை அனுமதித்தால் மரபணு மாற்றம் செய்யப்பட்ட தக்காளி, கடுகு, உருளை கிழங்கு, காலி பிளவர் என ஒவ்வொரு காய், கனிகளாக இந்தியாவுக்குள் நுழைந்து விடும் என அவர்கள் கூறினார்கள். அமைதியாக இருக்குமாறு ஜெயராம் ரமேஷ் விடுத்த வேண்டுகோளை யாரும் கேட்கவில்லை.*

*10 நாட்களில் முடிவு*

*கூட்ட அரங்கில் இருந்து சில விவசாய பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்து விட்டனர். நீண்ட நேரம் நடந்த அமளிக்கு பிறகு, அமைதி ஏற்பட்டது.*

*அப்போது பேசிய ஜெயராம் ரமேஷ், "ஆலோசனை கூட்டத்தை ரத்து செய்ய முடியாது. அனைவருடைய கருத்துகளையும் கேட்பதற்காக, கூட்டம் சுமூகமாக நடக்க உதவி செய்ய வேண்டும். ஏற்கனவே 5 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த கூட்டத்தை போல, எங்கும் அமளி ஏற்பட்டதில்லை'' என்றார்.*

*மேலும் அவர் கூறுகையில், "விவசாய சங்கங்கள், விஞ்ஞானிகள், வேளாண் வல்லுனர்கள், நுகர்வோர் உரிமை சங்கங்கள் உட்பட அனைவருடைய கருத்துகளும் பரிசீலிக்கப்படும். நடுநிலையான ஆலோசனை கூட்டத்தை நடத்தவே நான் விரும்புகிறேன். பொதுமக்களிடம் இருந்து பாரபட்சமற்ற கருத்துகளை பெற்ற பிறகு, இறுதி முடிவு எடுக்கப்படும். பி.டி. கத்தரிக்காயை வர்த்தக பயன்பாட்டுக்கு அனுமதி அளிப்பது குறித்து இன்னும் 10 நாட்களில் அறிவிக்கப்படும்'' என்றார்.*

## ***2020–ம் ஆண்டுக்குள்***
## ***25 சதவீத கரியமில வாயு வெளியேற்றத்தை குறைக்க இந்தியா முடிவு***
## ***ஐ.நா.சபையில் அறிக்கை தாக்கல்***

*புதுடெல்லி, பிப்.1–*

2020–ம் ஆண்டுக்குள் 20 முதல் 25 சதவீத கரியமில வாயு வெளியேற்றத்தை குறைக்க முடிவு செய்திருப்பதாக ஐ.நா.சபையில் தாக்கல் செய்த திட்ட இலக்கு அறிக்கையில் இந்தியா கூறியுள்ளது.

கரியமில வாயு கட்டுப்பாடு

பூமி வெப்பமடைவதை தடுக்க உலக நாடுகள் கரியமிலவாயு வெளியேற்றத்தை குறைக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக கடந்த மாதம் டென்மார்க் தலைநகர் கோபன் ஹேகனில் 194 நாடுகள் கலந்து கொண்ட பருவநிலை மாற்ற உச்சி மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் கரியமில வாயு வெளியேற்றத்தை குறைப்பதில் உலக நாடுகளுக்கு இடையே ஒரு வரி ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது.

கரியமிலவாயுவை கட்டுப்படுத்துவது தொடர்பான திட்ட இலக்கில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையே எந்த பாகுபாடும், கட்டுப்பாடுகளும் இருக்கக் கூடாது என்று பேசிக் அமைப்பு நாடுகளான பிரேசில், தென் ஆப்பிரிக்கா ஆகியவற்றுடன் இணைந்து இந்தியாவும் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் இந்த ஒப்பந்தம் சட்டப் பூர்வமானதாக அறிவிக்கப்படவில்லை.

ஐ.நா.சபையில் தாக்கல்

எனினும், கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவது தொடர்பான திட்ட இலக்கை நிர்ணயம் செய்து ஜனவரி மாதம் 31–ந்தேதிக்குள் அனைத்து நாடுகளும் ஐ.நா. சபையில் இது குறித்து விரிவான அறிக்கையை தாக் கல் செய்வது என அப்போது முடிவு செய்யப்பட்டது. இதன்படி ஒவ்வொரு நாடும் ஐ.நா.சபையின் பருவநிலை மாற்ற கட்டமைப்பு பேரவையில் தங்களது அறிக்கையை தாக்கல் செய்தன. அமெரிக்கா 2 நாட்களுக்கு முன்பு தாக்கல் செய்த அறிக்கையில், 2005–ம் ஆண்டு தங்கள் நாட்டில் இருந்த கரியமில வாயு வெளியேற்ற அளவில் இருந்து 17 சதவீதத்தை 2020–க்குள் கட்டுப்படுத்தும் என்று தெரிவித்து இருந்தது.

இதேபோல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 2020–க்குள் 20 சதவீதத்தை கட்டுப்படுத்தும் என்று உறுதியளித்துள்ளன. எனினும், தங்களைப் போலவே பெரிய நாடுகள் அதிக அளவில் கரியமிலவாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்த ஒப்புக் கொண்டால் தாங்கள் 30 சதவீதம் வரை கூட குறைக்க தயாராக இருக்கிறோம் என்றும் அந்த அமைப்பின் நாடுகள் ஐ.நா.விடம் உறுதி கூறி உள்ளன.

25 சதவீதத்தை குறைப்போம்

இந்த நிலையில், அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கான கடைசி நாளுக்கு முந்தைய நாளான நேற்று முன்தினம் தனது திட்ட இலக்கு நிர்ணய அறிக்கையை ஐ.நா. சபையில் இந்தியா தாக்கல் செய்தது.

அதில் 2005–ம் ஆண்டு இந்தியாவில் இருந்த கரியமில வாயு வெளியேற்ற அளவில் இருந்து 20 முதல் 25 சதவீதத்தை 2020–ம் ஆண்டுக்குள் கட்டுப்படுத்த இந்தியா இலக்கு நிர்ணயித்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துக்கு விலக்கு

எந்தெந்த துறைகளில் கரியமில வாயு கட்டுப்படுத்தப்படும் என்பது குறித்து குறிப்பிடப்பட்டுள்ள இந்திய திட்ட இலக்கு அறிக்கையில், விவசாய துறை சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

'பெருகி வரும் மக்கள் தொகை சவாலை சந்திக்கும் பொருட்டு உணவு பாதுகாப்பின் அவசியம் கருதி வேளாண்துறைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக' அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

கட்டுப்படுத்தக் கூடாது

பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சந்திக்கவேண்டும் என்றால், கரியமில வாயுவை கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் உள்நாட்டில் இருந்தே தொடங்கப்படவேண்டும்.

அவை இயல்பாக முழுக்க முழுக்க நாடுகள் தாங்களாகவே எடுக்கும் நடவடிக்கைகளாக இருக்கவேண்டும். சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்துவதாக அது அமையக் கூடாது என்றும் இந்தியா அந்த அறிக்கையில் வலியுறுத்தி இருக்கிறது.

கரியமில வாயு குறைப்பு நடவடிக்கைகளை இந்தியா தனது தேசிய சட்ட திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.